ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ள்: பதினெட்டு — Valampurii

ள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 18 செவ்வாய்க்கிழமை (01.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 164

ராம்கோ RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந்
தர தொழிற்சாலையிலிருந்து
தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## ன் சிறைச்சாலைக்கு நேற்று யகமூர்த்தி எம்.பி. விஜயம்

### கைதிகளுடன் கலந்துரையாடினார்

(யாழ்ப்பாணம்)

தசியக் கூட்டமைப்பின் யாழ். ளுமன்ற உறுப்பினர் அப்பாத் மூர்த்தி நேற்று மகசீன் சிறைச் ஜயம் செய்தார்.

றைச்சாலையில் தடுத்து வைக் 20 தமிழ் அரசியல் கைதிகளின் ஏற்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் டி.ஜி. குணசேகரவின் அனுமதியுடன் அவர் சிறைச் சாலைக்குச் சென்றார்.

அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பி னர் கைதிகளுடன் பேச்சு நடத்தினார். ஜே.வி. பி. கிளர்ச்சியாளர்களை விடுதலை செய்தது போல் இலங்கை–இந்திய ஒப்பந்தத்தில் தமிழ் அரசியல் கைதி (18 ஆம் பக்கம் பார்க்க)

## போரில் காணாமல் போனோருக்கு மரணச் சான்றிதழ் வழங்கத் திட்டம்

(கொழும்பு)

இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற போரின் போது காணாமல் போனவர்களின் உறவினர் களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கப்படவுள் ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

காணாமல் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கும் நோக்கில் விசேட தற் காலிக சட்டம் ஒன்றை அமுல்படுத்த அரசாங் கம் திட்டமிட்டுள்ளது.

காணாமல் போனோரின் மரணச் சான்றி தழ்களை வழங்குவதற்காக ஏற்கனவே அமு லில் இருந்த சட்டத்தை மீளவும் அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குறித்த சட்ட மூலம் தொடர்பான வரைபுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. தற் போது நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படையில் நபர் ஒருவர் காணாமல் போய் ஏழு வருடங்கள் (18 ஆம் பக்கம் பார்க்க)

# னித உரிமை மீறல்கள் குறித்து
# ர்வதேச விசாரணை தேவை



## நவநீதம்பிள்ளை வலியுறுத்து

(ஜெனீவா)

இலங்கையில் நடந்து முடிந்த போர் குறித்த விடயங்களை ஆராய்வதற்குச் சுயாதீனமான சர்வதேச மட்டத்திலான ஒரு விசாரணையே சிறப்பான ஒரு பலனைத் தரும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் நவநீதம் பிள்ளை தெரிவித்துள் ளார். அப்படியான ஒரு விசாரணை மூலமே நீதியும், நீண்ட கால நல்லிணக்கமும் ஏற்பட வாய்ப்பு உருவாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (18 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு முஸ்தபாவுக்கு உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவை ஜூலை 12 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிபதி விஜயசுந்தர நேற்று உத்தரவிட்டார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்குமாறுகோரி தேசிய சுதந்திர முன்ன ணியின் நாடாளுமன்ற உறுப்பினர் முகமொட் முசம்மிலுக்கு 42 இலட்சம் ரூபாய் வழங்கிய தாகக் குற்றஞ்சுமத்தப்பட்டு தாக்கல் செய்யப் பட்டுள்ள வழக்கிலேயே இந்த அழைப்பா ணை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா சுகவீனம் காரணமாக லெபனானில் சிகிச்சை பெற்று வருவதாக அவர் சார்பில் (18 ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்ற அமைச்சர் அடுத்த வாரம் யாழ்.வருவார்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர் னாண்டோ அடுத்த வாரம் யாழ்ப்பாணத்துக் கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள் ளார்.

யாழ்.குடாநாட்டு முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்றம் மற்றும் அவர்களின் தற்போ தைய நிலைமை தொடர்பில் ஆராயும் பொருட்டே இந்த விஜயம் இடம்பெறவுள்ளது என்று யாழ்.மாநகர சபை உறுப்பினர் ஏ.சுபி யான் தெரிவித்தார். (ச–5)

## ணேசபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட லங்கள் தோண்டி எடுக்கப்பட்டன

### களின் சீருடையில் மூன்று சடலங்கள்!

(கிளிநொச்சி)

ச்சி கணேசபுரத்தில் மலசலக் ண்டுபிடிக்கப்பட்ட மனித சடலங் தோண்டி வெளியில் எடுக்கப்

நீதிவான், வவுனியா சட்ட வைத் இராணுவம் ஆகியோர் முன்னி ாலிஸாரினால் இச் சடலங்கள் க்கப்பட்டன.

ன் உத்தரவுக்கமைய இந்தச் சட லங்கள் மருத்துவ பரிசோதனைக்காக வவுனி யா வைத்தியசாலையில் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பொலித்தீன் பைகளில் சுற்றப்பட்டுள்ள நிலையில் ஐந்து சடலங்கள் காணப்பட்டன. ஆணா? பெண்ணா? என்று இனங்காண வோ, அவர்கள் யார் என்று அடையாளம் காணத்தக்கதாகவோ அவை இருக்கவில்லை என இச் சடலங்கள் தோண்டிக்கப்பட்ட போது அங்கு சென்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறி தரன் தெரிவித்துள்ளார்.

இச் சடலங்களில் ஒன்று புடைவையால் சுற் றப்பட்டிருந்தது. மூன்று சடலங்கள் விடுத லைப்புலிகள் பயன்படுத்தி சீருடைய ஒத்த காற்சட்டையுடன் காணப்பட்டது.

மற்றொரு சடலம் இராணுவக் காக்கிச் சீரு டை காற்சட்டையும் காணப்பட்டது என்று அவர் கூறினார்.

இச் சடலங்கள் (18 ஆம் பக்கம் பார்க்க)

## வதேச குற்றவியல் நீதிமன்ற ரணைக்கு அனான் வலியுறுத்து

(கொழும்பு)

கயில் இறுதி யுத்தத்தின் போது ாரதூரமான குற்றச் செயல்கள் வதேச குற்றவியல் நீதிமன்றம் வண்டும் என்று ஐக்கிய நாடுகள் ன்னாள் செயலாளர் நாயகம் ன் வலியுறுத்தியுள்ளார்.

யோர்க் ரைம்ஸ் பத்திரிகைக்கு ட்டியொன்றிலேயே இவ்வாறு ளார். அவர் இது குறித்து முக்கி யமாகத் தெரிவித்துள்ளவை வருமாறு,

யுத்தக் குற்றங்கள் மனித குலத்துக்கு எதி ரான குற்றங்கள். இனச் சுத்திகரிப்புப் போன்ற குற்றங்களை விசாரிப்பதற்காகவே சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டது.

இக் குற்றவாளிகள் கட்டயம் கண்டுபிடிக் கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். தப்பிக்க அனுமதிக்கப்படக் கூடாது. எனவே இலங் கை, பாலஸ்தீனம் ஆகிய நாடுகளின் கடந்த வருடம் இடம் (18 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதப் புதைகுழி அச்சமே மீள்குடியமர்வில் தாமதம்

### அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

இறுதி நாள்களில் யுத்தம் இடம்பெற்ற நிலப்பரப்புக்களில் மனித உடல்கள் வகை தொகையின்றிப் புதைக்கப்பட்டிருப்பதாலே யே அரசு மீள்குடியேற்றத்தைத் திட்டமிட்டுத் தாமதித்துக் கொண்டிருக்கின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

அவர் சர்வதேச புகைத்தல் ஒழிப்புத் தினத் தை முன்னிட்டு மட்டக்களப்பில் நடத்தப்பட்ட விழிப்புணர்வுப் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு, கிளிநொச்சி (18 ஆம் பக்கம் பார்க்க)

## பொய் சொன்ன வாய்க்கு அகதி அந்தஸ்து இல்லை

(கொழும்பு)

இலங்கைத்தமிழ் பெண் ஒருவருக்கு வழங்கி இருந்த அகதி அந்தஸ்தை நியூசிலாந்து அரசு இல்லாமல் செய்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்கிற சந்தேகத்தில் இலங்கை இராணுவத்தினர் சித்திரவதை செய்தனர் என்று தெரிவித்து பிரஸ்தாப பெண் ஒன்பது வருடங்களுக்கு முன் நியூசிலாந்தில் அரசியல் தஞ்சம் பெற்றிருந்தார்.

அந்நாட்டு அரசு இவருக்கு பிரஜாவுரிமையும் வழங்கி இருந்தது. இந் நிலையில் அவர் பொய் சொல்லி நியூசிலாந்து அரசை ஏமாற்றி அகதி அந்தஸ்து பெற்றிருக்கிறார் என்று தற்போது நிரூபணம் ஆகி உள்ளது. இந்நிலையில் நியூசிலாந்து அரசு அவருக்கு வழங்கிஇருந்த அகதி அந்தஸ்தை ரத்துச் செய்துள்ளது. அத்துடன் அவரின் பிரஜாவுரிமையை ரத்துச்செய்வது குறித்தும் யோசித்து வருகின்றது. (ச-3,5)

## டிலான் பெரேரா தலைமையில் இன்று விசேட கலந்துரையாடல்

(காரைநகர்)

யாழ். மாவட்ட அரச செயலகங்களை வினைத்திறன் உள்ளதாக செயற்படுத்துவதற்கான கலந்துரையாடல் இன்று மாலை 3 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாக உள்நாட்டு அலுவல்களின் பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அலுவலகங்களில் உத்தியோகத்தவர்கள் பற்றாக்குறை, கிராம சேவையாளர்கள் பற்றாக்குறை மற்றும் ஏனைய ஆளணிப்பற்றாக்குறைகள், அலுவலகப் பற்றாக்குறைகள் என்பன நிலவுகின்றன.

அவற்றினை நிறைவு செய்யும் முகமாக யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் திணைக்களதலைவர்களுடான கலந்துரையாடலில் புள்ளி விபரங்களை அறியவுள்ள அதே வேளை புதிய அலுவலகங்களை அமைப்பது தொடர்பாகவும் ஆராயப்படுகிறது.

இப் புதிய அலுவலகத்திற்கு வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இவைகளை நிறுவதன் ஊடாகவும் ஆளணியினரை நியமிப்பதன் ஊடாகவும் அரச நியமனங்களை வினைத்திறன் உள்ளதாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச-246)

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய சங்காபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

நண்பகல் 12 மணிக்கு பஞ்சமுக விநாயகரின் திருவீதியுலாவும் மாலை எழுந்தருளி உற்சவமும் இடம் பெறும். (ச)

## கிளிநொச்சியில் நடமாடும் சேவை

(காரைநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நடமாடும் சேவை இம் மாதம் 29ஆம்,30ஆம் திகதிகளில் நடை பெறவுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இச் சேவையின் மூலம் கிளிநொச்சி மாவட்ட மக்களின் பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் அத்தியாவசிய ஆவணங்களைபெற்றுக்கொள்ள முடியும்.

இந் நடமாடும் சேவை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ச-246)

## மக்களின் மனங்களை கவர ஐ.தே.கட்சி முயற்சி

மக்களின் மனங்களைக் கவரக்கூடிய வகையில் ஐ.தே.கட்சியை மேம்படுத்த முடியுமென கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஜெயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் பொதுத் தேர்தல்களில் வெற்றிபெறும் கட்சியாக ஐக்கிய தேசியக்கட்சியை மாற்றுப்பாதையில் இட்டுச் செல்லப் போவதாக அவர் தெரிவித்தார்.

தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர்கள் எமது முயற்சியினை பரிகாசம் செய்கின்றனர் ஆனால் அவர்கள் தமது கட்சி நடவடிக்கைகளுடன் செயற்பாடுகளை மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடகப்பேச்சாளர் ஜெயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார். (ச-3)

## பிரித்தானியாவில் தமிழுக்குப் புகழ்

(லண்டன்)

பிரித்தானியாவில் முன்பள்ளிகளில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் தமிழ் ஒரு பாடமாக கற்பிக்கப்படுவதற்கும் கற்கப்படுவதற்கும் ஆன சந்தர்ப்பம் அதிகரித்துள்ளது.

அரசின் புதிய கல்வி கொள்கையின் படி எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் பிரித்தானியாவில் அனைத்து முன்பள்ளிகளிலும் 5 வயது முதல் 11 வயது வரையான மாணவர்களுக்கு ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய இரு மொழிகள் கட்டாயம் கற்பிக்கப்பட வேண்டும் பிரித்தானியாவில் குடியேறியிருப்பவர்கள் கணிசமான தொகையினர் தமிழர்கள் ஆவர்.

பிரித்தானியாவில் அதிகம் புழக்கத்தில் உள்ள வேற்று மொழிகளில் தமிழும் ஒன்றாகும். எனவே பிரித்தானிய அரசின் இப் புதிய யோசனை தமிழ் மொழிக்கு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் சந்தேகமே இல்லை என அறிஞர்கள் தெரிவித்தனர். (ச-5)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை வீரமாகாளி அம்மன் தேவஸ்தான திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது தொடர்ந்து 25 நாட்கள் உற்சவம் நடைபெறும்.

24ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் 26ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ச-3)

# பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டி வெற்றி பெற்ற அணிகளின் விபரங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற இவ்வருடத்திற்கான விளையாட்டுப்போட்டிகள், பெரு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்று முதல் மூன்று இடங்களினையும் பெற்றுக்கொண்ட அணிகள் முறையே வருமாறு.

**எல்லே**

**ஆண்கள்:** கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி.

**பெண்கள்:** மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, அருணோதயக்கல்லூரி.

**கபடி**

**ஆண்கள்:** கலட்டி றோமன்கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை, இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம், வேலாயுதம் மகாவித்தியாலயம்.

**பெண்கள்:** இளவாலை கன்னியர்மட வித்தியாலயம், பண்டத்தரிப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

**கூடைபந்தாட்டம்**

**ஆண்கள்:** யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

**பெண்கள்:** திருக்குடும்பக் கன்னியர் மடம், உடுவில் மகளிர்கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி.

**மென்பந்து துடுப்பாட்டம்**

**ஆண்கள்:** யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி; யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி; வேலணை மத்திய கல்லூரி.

**பெண்கள்:** பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை ; நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்; விக்டோரியாக் கல்லூரி.

**மேசைப்பந்தாட்டம்**

**ஆண்கள்:** யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி; யூனியன் கல்லூரி; யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

**பெண்கள்:** யாழ்.இந்து மகளிர் கல்லூரி; யூனியன் கல்லூரி; சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

**பூப்பந்தாட்டம்**

**ஆண்கள்:** மானிப்பாய் இந்துக்கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி, உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்.

**பெண்கள்:** சுண்டுக்குளி மகளிர் கல்லூரி; யாழ்.இந்துமகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**உடற்பயிற்சிப் போட்டி**

**ஆண்கள்:** சென் ஹென்றியரசர் கல்லூரி, சென் அன்டனிஸ் கல்லூரி, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.

**பெண்கள்:** மானிப்பாய் மகளிர் கல்லூரி, இளவாலை கன்னியர்மட வித்தியாலயம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**உதைபந்தாட்டம்**

**ஆண்கள்-17வயதுப் பிரிவு:** மானிப்பாய் இந்துக்கல்லூரி, சென் ஹென்றியரசர் கல்லூரி, தேவரையாளி இந்துக்கல்லூரி.

**19வயதுப் பிரிவு:** உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன்கல்லூரி,மானிப்பாய் இந்துக்கல்லூரி, சென் ஹென்றியரசர் கல்லூரி.

**பெண்கள்-19வயதுப் பிரிவு:** மானிப்பாய் மகளிர் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, சென் தோமஸ் றோமன்கத்தோலிக்க மகளிர் கல்லூரி.

**கரப்பந்தாட்டம்**

**ஆண்கள்-15வயதுப் பிரிவு:** ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

**பெண்கள்-15வயதுப் பிரிவு:** பருத்தித்துறை பெண்கள் உயர்தர பாடசாலை, அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

**ஆண்கள்-17வயதுப் பிரிவு:** புத்தூர் ஸ்ரீ தோமஸ்கந்த வித்தியாலயம், ஆவரங்கால் நடராஜா ராமலிங்கம் மகாவித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரி.

**பெண்கள்-17வயதுப் பிரிவு:** மகாஜனாக் கல்லூரி, அருணாசலம் வித்தியாலயம், கைதடி நாவற்குழி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

**ஆண்கள்-19வயதுப் பிரிவு:** புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த வித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி, சென் அன்ரனிஸ் கல்லூரி.

**பெண்கள்-19வயதுப் பிரிவு:** மகாஜனாக் கல்லூரி, பருத்தித்துறை பெண்கள் உயர்தர பாடசாலை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

**சதுரங்கம்**

**ஆண்கள்-15வயதுப் பிரிவு:** ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, மகாஜனக் கல்லூரி.

**பெண்கள்-15வயதுப் பிரிவு:** யாழ். இந்து மகளிர்கல்லூரி, பருத்தித்துறை பெண்கள் உயர்தர பாடசாலை, அருணோதயக்கல்லூரி.

**ஆண்கள்-19வயதுப் பிரிவு:** ஹாட்லிக்கல்லூரி; யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

**பெண்கள்-19வயதுப் பிரிவு:** யாழ். இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, வடமராட்சி மத்திய கல்லூரி.

**ஹொக்கி**

**பெண்கள்:** உடுவில் மகளில் கல்லூரி,குளமாங்கல் றோமன் கத்தோலிக்க தமிழ்கல வன் பாடசாலை , வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக்கல்லூரி.

**கரம்**

**ஆண்கள்-15வயதுப் பிரிவு:** சென் பற்றிக்ஸ் கல்லூரி; சென் ஜோன்ஸ் கல்லூரி; உடுவில் மான்ஸ் கல்லூரி.

**பெண்கள்-15வயதுப் பிரிவு:** சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்.இந்து மகளிர்கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**ஆண்கள்-19வயதுப் பிரிவு:** சென் ஜோன்ஸ் கல்லூரி,கொக்குவில் இந்துக் கல்லூரி , சென் பற்றிக்ஸ் கல்லூரி.

**பெண்கள்-19வயதுப் பிரிவு:** சுண்டுக்குளி மகளிர் கல்லூரி,யாழ். இந்துமகளிர் கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

**வலைப்பந்தாட்டம்**

**பெண்கள்-15வயதுப் பிரிவு:** வடமராட்சி இந்து மகளிர்கல்லூரி,சண்டிலிப்பாய் இந்து மகளிர் கல்லூரி,வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

**17வயதுப் பிரிவு:** யூனியன் கல்லூரி; சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி; வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**19வயதுப் பிரிவு:** யூனியன் கல்லூரி, இராம நாதன் மகளிர் கல்லூரி,புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரி. (ச-5)


## நெஞ்சம்விட்டகலா நினைவலைகள்

கிளிநொச்சி மகாவித்தியாலய சிரேஷ்ட ஆசிரியர் திரு.க.விஜயசேகரன் அவர்களின் அன்பு மகன் திலீபன் அவர்கள் வன்னியில் இடம்பெற்ற கொடிய போரின் போது எம்மைவிட்டுப்பிரிந்தார் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

இவரது இழப்பால் துயருற்று இருக்கும் எமது சகோதர ஆசிரியரினதும் அவரது குடும்பத்தினரதும் துயரில் நாமும் பங்குகொள்கிறோம்.

ஆசிரியர் ஒன்றியம்
கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்
(இ)

## விற்பனைக்கு

சகல வசதிகளும் அடங்கிய அழகிய வீடு வட்டுக்கோட்டையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0214909270

(C-358)

# இன்று ஒரு தகவல்

## போலிச்சாமியார்கள்

ஒரு ஊரில் இரண்டு பேர் இருந்தார்கள். அவர்களிருவரும் ஊரை ஏமாற்றிச் சம்பாதிப்பதற்கு என்ன வழி என்று யோசித்தார்கள். சுலபமாக ஒரு வழி தெரிந்தது. அதன் பிரகாரம் இரண்டு பேரும் சாமியார் வேஷம் போடுவதென்று தீர்மானித்தார்கள்.

உடனே போலிச்சாமியார் வேஷம் போட்டுக் கொண்டு ஒரு கோயிலில் போய் உட்கார்ந்தார்கள். திட்டம் போட்டு ஊர் முழுவதும் ஒரு செய்தியைப் பரப்பி விட்டார்கள்.

அதாவது, இந்த மாதம் 18 ஆம் திகதி இந்த ஆலயத்தில் ஒரு மகான் தோன்றி காட்சியளிக்கப் போகிறார். சனங்களெல்லாம் அதைப் பார்க்கலாம். நம் குறைகளையெல்லாம் அவர் தீர்த்து வைப்பார் என்று ஒரு அறிவிப்புக் கொடுத்துவிட்டார்கள்.

சனங்களும் பய பக்தியுடன் மகானைத் தரிசனம் பண்ணுவதற்கு காத்துக் கொண்டிருந்தார்கள். எப்ப அந்த 18 ஆம் திகதி வருமென்று.

இது இவ்வாறிருக்க,பக்கத்து ஊரில் ஒரு சிறை இருந்தது. அங்கிருந்த 2 கைதிகள் 17 ஆம் திகதி இரவு சுவரேறிக் குதித்து தப்பிவிட்டார்கள். பொலிஸ் அவர்களை துரத்தியது.

அந்த இரண்டு பேரில் ஒருத்தன் ஒரு தோப்பு வழியாக ஓடி வந்தான். வரும் வழியில் ஒரு கட்டில் காலியாகக் கிடந்தது. உடனே அதில் சடாரென்று காலை நீட்டி படுத்துக் கொண்டு அங்கேயிருந்த போர்வையை எடுத்து உடம்பை மூடிக் கொண்டான்.

அந்தக் கட்டில் ஒரு பிச்சைக்காரனுடையது. அவனுக்கு ஒரு கால் கிடையாது. அவன் எங்கேயோ பிச்சையெடுக்கப் போயிருந்தான். இந்தச் சமயம் பார்த்து இந்தக் கைதி அவனுடைய படுக்கையில் போய்ப் படுத்துக் கொண்டான்.

துரத்திக்கொண்டு வந்த பொலிஸ்காரர்கள் கிட்ட வந்து பார்த்தார்கள். ''சரி... பிச்சைக்காரன் தான் படுத்திருக்கிறான் போலிருக்கு'' என்று நினைத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

தப்பியோடிய இன்னொரு கைதி கோயிலுக்குள் போய் நுழைந்து விடுகிறான். ஒரே இருட்டு. மூலையில் போய் வசதியாக ஒளிந்துகொண்டு திரும்பிப் பார்த்தால்... அங்கே இவனை மாதிரியே இன்னொருத்தன் உட்கார்ந்திருந்தான்.

''யாரடா நீ?'' என்று விசாரித்தான். அதற்கு அவன் ''நான் வந்து இந்தக் கோயிலில் இருக்கும் பெரியசாமியாரின் மச்சான். நாளைக்குக் காலையில் நான் தான் இவ்வூர் மக்களுக்கு மகானாக காட்சியளிக்கப் போகிறேன். அதற்காகத்தான் என்னை ஊரிலிருந்து அழைத்துக் கொண்டு வந்து இங்கே உட்கார வைத்திருக்கிறார்கள்'' என்றான்.

கைதி பார்த்தான்... இவனுக்குப் பதிலாக நாமே மகானாக காட்சி கொடுத்தால் என்ன? என்று யோசித்தான்.

அந்த மச்சான்காரனை இரவோடிரவாக ஊருக்குப் போய்ச் சேர் என்று விரட்டி அடித்துவிட்டு இவன் அங்கே தயாராக இருந்து கொண்டான்.

மறுநாட் காலை மகானைப் பார்ப்பதற்கு ஆயிரக்கணக்கான மக்கள் கோயிலுக்கு முன் உள்ள திடலில் கூடியிருந்தார்கள்.

சிறைக்கைதி மகான் வேஷத்தில் மெதுவாக வெளியில் வந்தார். சாமியார்கள் பார்த்தார்கள். இது நாம் தயார் பண்ணின ஆள் இல்லையே... என்று அதிர்ச்சியானார்கள். என்னமோ நடந்திருக்கிறது என்பதைப்புரிந்து கொண்டார்கள். இருந்தாலும் என்ன செய்ய முடியும்? இதற்குள் சனங்கள் முட்டி மோதிக் கொண்டிருந்தனர்.

பெரிய சாமியார் சனங்களைப் பார்த்துக் கத்தினார். '' மகான் தோன்றி விட்டார். எல்லோரும் அவரை வணங்குங்கள்'' என்றார். எல்லோரும் வணங்கினார்கள். இன்னொரு சாமியார் அந்த மகானிடம் வந்து, ''ஏதாவது அற்புதம் நிகழ்த்துங்க. சனங்கள் உங்களுடைய சக்தியைப் புரிந்து கொள்ளட்டும்'' என்றார்.

இப்பொழுது இவனுக்குத் தேள் கொட்டியது போல் ஆகிவிட்டது. திருதிருவென்று முழிக்க ஆரம்பித்தான். கூட்டத்தைப்பார்த்தான். அங்கே இவனோடு தப்பித்த இன்னொரு கைதி காலி இழந்த பிச்சைக்காரன் வேஷத்தில் அங்கே நின்று கொண்டிருந்தான். உடனே இவனுக்கு ஒரு ஐடியா தோன்றியது.

''ஓ... கால் இல்லாத மனிதனே... உன் கால் ஊனத்தை சரிப் படுத்தட்டுமா?'' என்றான்.

''அது என் பாக்கியம்'' என்று சொல்லி அவன் கிட்ட வந்தான்.

''உன் கால்கள் சரியாகப் போகக் கடவது'' என்றான்.

உடனே அவன் காலை உதறிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான் சனங்களுக்கு ஆச்சரியம்!

அதன்பின் நிறையப் பேர் மகானைத் தேடி வர ஆரம்பித்தனர்.

ஒரு நாள் பெரியசாமியார் இந்த 'மகானிடம்' நிறையப் பணம் கொடுத்து தனது மகளையும் அவருக்குக் கட்டிக் கொடுத்து இரண்டுபேரும் எங்கேயாவது போய் சௌக்கியமாக இருங்க என்று சொல்லி அனுப்பி வைத்துவிட்டார். அந்த ஆளும் இது தான் சான்ஸ் என்று சொல்லி ஓடிப்போய்விட்டான்.

அவன் போன பின் இந்த போலிச்சாமியார்கள் சனங்களிடம் ''அந்த மகான் திடீரென்று மறைந்துவிட்டார்'' என்று சொல்லி அவருடைய படங்களை அச்சடித்து விற்பனை செய்ய ஆரம்பித்தார்கள். அந்த வியாபாரம் அமோகமாக நடந்ததாம்.

மூட நம்பிக்கைகள் இப்படித்தான் பரவுகின்றன என்பதற்கு இது நல்ல ஒரு உதாரணம்.

ஒரு ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். எல்லோருக்கும் ஆருடம் சொல்லிக் கொண்டிருந்தார். பாவம் செய்பவர்களுக்குப் பரிகாரமும் சொல்வார். அவரிடம் ஒருத்தன் வந்து...

''ஐயா... நான் ஒரு பெண்ணை அவளுடைய அப்பாவுக்குத் தெரியாமல் அழைத்துக் கொண்டுபோய் திருமணம் செய்து கொண்டேன். நான் செய்தது பாவம் என்றால் அதற்குப் பரிகாரம் என்ன?'' என்று கேட்டான்.

இது பாவம் இல்லை. அந்தப் பெண்ணின் அப்பாவை இங்கு அழைத்துக் கொண்டுவா. நான் பிரச்சினையைத் தீர்த்து வைக்கிறேன்'' என்றார்அவர். ''அதிலேயும் ஒரு பிரச்சினை இருக்கு'' என்றான் இவன்.

''என்ன பிரச்சினை?'' என்றார்.

''அந்த அப்பாவே நீங்கதானே'' என்றான் இவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த(சா/த),(உ/த) மாணவர்கள்

## தேசிய அடையாள அட்டைகளைப் பெற துரிதமாக விண்ணப்பிக்குமாறு வேண்டுகோள்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் தோற்றும் மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுக்க துரிதமாக விண்ணப்பிக்குமாறு ஆட்பதிவுத் திணைக்களம் சகல பாடசாலை அதிபர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள எதிர்வரும் ஜுலை மாதம் 15 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இதற்காக ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்.

16 வயதினை பூர்த்தி செய்த சகலருக்கும் ஆள் அடையாள அட்டையினை பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க முடியும் என்று ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் ஏ.ஜி.தர்மதாச தெரிவித்துள்ளார்.

நேரகாலத்துடன் விண்ணப்பங்களை அனுப்புவதன் மூலம் அடையாள அட்டைகளை வழங்குவதில் ஏற்படும் நெருக்கடிகளை குறைத்துக் கொள்ள முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

உரிய வயதை பூர்த்தி செய்யாத மாணவர்கள் விண்ணப்பங்கள் அனுப்புவதன் காரணமாக இறுதித் தருணத்தில் அநாவசிய நெருக்கடிகள் ஏற்படுவதாகவும் இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் ஊடாக சகல அதிபர்களுக்கும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்று ஆட்பதிவு திணைக்களஆணையாளர் தெரிவித்தார். (6)

## வயாவிளான் ஒட்டகப்புலம் சென்மேரிஸ் தேவாலயத்திற்கு செல்ல இராணுவம் அனுமதி

(யாழ்ப்பாணம்)

வயாவிளான் ஒட்டகப்புலம் சென்மேரிஸ் தேவாலயத்தில் மக்களின் வழிபாடியற்ற இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.

1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தின் போது பலாலிப் பிரதேசத்தில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்த வேளையில் அப் பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வயாவிளான் சந்திக்கும் அச்சுவேலிக்கும் இடைப்பட்ட உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருந்த சென்மேரிஸ் தேவாலயத்திற்கு வழிபாட்டிற்காக மக்கள் செல்ல இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.

2006 ஆம் ஆண்டில் ஒரு நாள் ஆலயத்தை பார்வையிடுவதற்கும் வழிபாட்டிற்குமாக அத்தேவாலய பங்கு மக்கள் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.




இதனையடுத்து, தேவாலயம் வெளி நாட்டவர்களின் உதவியுடனும் பொது மக்களின் உதவியுடனும் புனரமைக்கப்பட்ட பின் மக்களின் வழிபாட்டிற்காக யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கத்துருசிங்கவால் திறந்து வைக்கப்பட்டு யாழ்ப்பாணம் கத்தோலிக்க திருச்சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத்தேவாலயத்திற்கு தென்பகுதி மகரமக பங்கு மக்களால் வழங்கப்பட்ட பொருட்களை யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கத்துருசிங்க ஆலய பங்குத்தந்தையிடம் கையளித்தார். 6-7)

## அதிபர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களிற்கு இன்று நடத்தப்பட இருந்த கூட்டமானது அதிபர்களிற்கான செயலமர்வாக நாளை புதன்கிழமை வலய முகாமைத்துவ மண்டபத்தில் காலை 9 மணிமுதல் இடம்பெறும். சகல அதிபர்களையும் தவறாது பங்குபற்றுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (6)

## இராசி பலன்

01-06-2010

(வைகாசி 18, செவ்வாய்க்கிழமை)

சதுர்த்தி முற்பகல் 8.15 மணிவரை

உத்தராடம் முன்னிரவு 7.11 மணிவரை

இராகுகாலம் 2.52-4.22மணிவரை

சுபநேரம் 10.22-11.52 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தொழில் மேன்மை, காரிய அனுகூலம், அதிகாரம், நல்ல செய்தி. |
| இடபம் | சரீரப் பிரயாசை, ஆரோக்கியக் குறைவு, பயணம், மனச்சஞ்சலம். |
| மிதுனம் | போசன சுகம், உடல் நலக்குறைவு, அச்சமான நிலை முயற்சி தாமதம். |
| கடகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், திடீர் பயணம், நண்பர்கள் சந்திப்பு, தனவருவாய். |
| சிங்கம் | சுகவாழ்வு, ஜனவசியம், தொழில் நன்மை, முயற்சி கைகூடும். |
| கன்னி | வியாபார மேன்மை, பித்தரோகம், காரிய தாமதம், குடும்பக் கவலை. |
| துலாம் | கல்வியில் ஆர்வம், மரியாதைக் குறைவு, சுபசெலவு, முயற்சி தாமதம். |
| விருச்சிகம் | இனிய சம்பவம், சகோதரர் உதவி, வாக்கு மேன்மை, காரிய நன்மை. |
| தனுசு | செய்தொழில் விருத்தி, மனஸ்தாபம், தனவிரயம், திடீர் நன்மை. |
| மகரம் | நண்பர்கள் உதவி, சயன சுகம், சிந்தனை மிகுதி, பொருள் விரயம். |
| கும்பம் | கோபப்படுதல், காரிய அலைச்சல் , உறவினர் சந்திப்பு, சுப செலவு. |
| மீனம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், மன மகிழ்ச்சி, உறவினர் வழி நன்மை, பொருள் சேர்க்கை. |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 90 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 90 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 45 |
| கோவா | 90 | 100 | 80 |
| கரட் | 140 | 160 | 150 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 60 | 80 | 65 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 70 |
| பாகற்காய் | 80 | 100 | 90 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 50 |
| பயிற்றங்காய் | 80 | 100 | 135 |
| லீக்ஸ் | 280 | 300 | 120 |
| பீற்றூட் | 80 | 90 | 50 |
| கறிமிளகாய் | 140 | 160 | 130 |
| முருங்கைக்காய் | 200 | 220 | 200 |
| போஞ்சி | 180 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 35 |
| தேசிக்காய் | 80 | 90 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# யாழ். கல்வி வலய அதிபர்களின் மலையகக் கல்வித் தரிசனம் 08

ஊட்டுவெளி வித்தியாலயம் வகுப்பறைகள் பிரிக்கப்படாத சிறிய மண்டபம் போன்றது. இதைவிட சிறிய அலுவலகம். இதுதான் அந்தப் பாடசாலையின் பௌதீக வளம். வகுப்பறைகள் எங்கும் காட்சிப்படுத்தல்கள். இலக்கு, நோக்கு என்பவற்றின்



ஒற்றையடிப் பாதையில் அதிபர்கள்

துலாம்பரங்கள் எல்லாமே அற்புதமாக இருந்தன.

இதைவிட அதிபரின் அலுவலகம் பாடசாலை தொடர்பான தகவல்களை வெளிப்படுத்தி நின்ற அதே நேரம், இந்த நாட்டின் பிரதமராக, ஜனாதிபதியாக இருந்த அத்தனை பேரின் புகைப்படங்களையும் தாங்கி நின்றமை எங்கள் எல்லோரையும் பிரமிக்க வைத்தன.

107 வருடங்களாக அடிப்படை வசதிகள் எதுவுமின்றி இயங்கும் இப்பாடசாலை இந்த நாட்டின் பிரதமர்



அதிபரின் அலுவலகத்தில்...

களாகவும் ஜனாதிபதிகளாகவும் பதவி வகித்தவர்களின் புகைப்படங்களை காட்சிப்படுத்தியதன் மூலம், நீங்கள் எல்லாம் உயர் பதவியில் இருந்தும் இந்தப் பாடசாலை இப்படியிருக்கிறது. பார்த்தீர்களா உங்கள் ஆட்சியின் திறத்தை. கல்விக்கு நீங்கள் கொடுத்த மதிப்பை என்று கேட்பது போல இருந்தது.

மாடமாளிகைகள் கூட கோபுரங்களில் தங்கள் புகைப்படங்களை வைக்க விரும்பும் இந்தநாட்டின் தலைவர்களுக்கு நாண நன்னயம் செய்யும் ஊட்டுவெளி வித்தியாலயத்தின் நுட்பம் பாராட்டப்பட வேண்டியது.

மிகவும் கடினமான சூழமைவில் இயங்கும் ஒரு பாடசாலை தனக்குக் கிடைக்கக் கூடிய மிகக் குறைந்த வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி சாதனை படைக்க முடியும் என்பதை செயலுருவில் நிரூபித்த பெருமை ஊட்டுவெளி வித்தியாலயத்திற்கே உரியது.

புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து மாணவர்கள் படைத்த சாதனை அந்த மலையுச்சிக்கப்பாலும் உயர்ந்து நின்று மலையக மக்களின் நம்பிக்கைக்கு வலுவேற்றுகின்றது.

பாடசாலைக்கு அருகிலுள்ள உயரம் குறைந்த மலையில் லயன் குடியிருப்பு. அந்த லயனில் வசிக்கும் பிள்ளைகள் இந்தப் பாடசாலையில் தான் கல்வி கற்கின்றனர்.

யாழ்ப்பாண அதிபர்கள் அந்தப் பாடசாலைக்கு வந்திருக்கின்றார்கள் என்ற செய்தியால் அவர்கள் தங்கள் குடியிருப்பிற்கு வெளியில் நின்று எங்களைப் பார்த்தவண்ணமிருந்தனர்.

அந்தப் பார்வையிலும் ஏழ்மையின் புரையோடல்கள்.வஞ்சகமில்லா மனங்கள். கூடவே எங்கள் தமிழ்ச் சகோதரர்கள் என்ற பற்றுதல். இந்த மௌன ராகங்களோடு ஊட்டுவெளிப் பாடசாலையிலிருந்து விடைபெறத் தயாரானோம்.

இருப்பதைக் கொண்டு சமாளிப்பதுதான் முகாமைத்துவம் என்ற பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் கருத்தியலுக்கு இப்பாடசாலை நல்லதோர் உதாரணம் என்ற நினைப்போடு மீண்டும் ஒருகிலோமீற்றர் தூரத்தில் தரித்து நிற்கும் பஸ்சை நோக்கிய பயணம் தொடர்ந்தது.

கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை சாமியே சரணம் ஐயப்பா



ஐயப்ப சரணம் சாமியே சரணம் சரணம்... இந்தப் பாடல்வரிகளை எங்கள் இதயத்தின் சோணையறைகள் சொல்லிச் சொல்லி சுருங்கி விரிய மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க பஸ்சில் ஏறி அமர்ந்துகொண்டோம்.

மலையக மக்களுக்கு இது நாளாந்தப் பயிற்சி என்பதால் அவர்களிடம் இந்த அழுத்தம், கலரோகம் என்ற வியாதிகளுக்கு இடமேயில்லை என்பதை அறிந்து கொண்டபோது நாங்களும் மலையகத்தில் வசித்திருக்கலாமே என்ற விருப்பு எங்களிடம் முளைவிட பஸ் மூச்சு வாங்கத் தொடங்கியது.அடுத்த பாடசாலைக்கான தரிசனத்திற்கு நீண்டதுரம் செல்ல வேண்டியதாயிருந்தது. உயர்ந்த மலையில் பஸ் மூச்சிழுக்கிறது

ஆசனத்தில் இருக்கும் எங்களுக்கோ பள்ளத்தாக்குத் தெரிகிறது. "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே"

பஞ்சாட்சர மந்திரத்தை படைக் கலமாக ஒருபகுதியினர் உச்சரிக்க, இன்னோர் பகுதியினர் தேவலோகத்தில் இருக்கும் பரமபிதாவை மன்றாடினர். சிலரோ பஸ்சின் ஆசனத்தில் இருந்தபடியே கீழ்நோக்கிப் பார்த்தனர்.

அந்தளவிற்கு ஆபத்தான பாதை அதுதான் மலையகத்துப் பாதை. நாம் என்ன செய்ய முடியும்.

இமைப் பொழுதும் எம் நெஞ்சில் நீங்காமல் இறைவன் இருந்தது அந்தப் பயணத்தின்போது என்பதை மறக்காமல் சொல்லத்தான் வேண்டும்.

இந்த உயர்ந்த மலைவழியே சென்று நுவரேலிய ஹோம்வூட் தமிழ் வித்தியாலயத்தை அடைந்தபோது மாலைப் பொழுதாகிவிட்டது.

அங்கும் சிறிதுதூரம் நடந்தே பாடசாலைக்குச் செல்லவேண்டும். அந்த மாலைப்பொழுதில் மலையகத்தின் பசுமைக் காட்சிகளில் உள்ளம் உருகிக் கொள்ள நுவரேலியா கோல்புறூக் தோட்டத்திலுள்ள நு/ஹோல்வூட் தமிழ் வித்தியாலயத்தை அடைந்தோம். (வளரும்)

**விதுரன்**




பாடசாலையின் தோற்றம்

# காணிப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண விசேட நீதிமன்ற கட்டமைப்பு

## காணி அபிவிருத்தி அமைச்சு கவனம்

(கொழும்பு)

காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக விசேட நீதிமன்ற கட்டமைப்பொன்றை ஸ்தாபிப்பதற்கு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோனின் பணிப்புரையின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மாவட்ட நீதிமன்றங்களில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான காணி வழக்குகள் வருடக்கணக்கில் விசாரிக்கப்பட்டு வருவதாகவும் நீண்டகாலமாக காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாமையானது பல்வேறு பிரச்சினைககளை தோற்றுவிக்க கூடுமெனவும் காணி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நீதி அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தி புதிய நீதிமன்ற கட்டமைப்பொன்றை நிறுவுவதற்கு காணி அபிவிருத்தி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. (6)

# வாழவைத்த தமிழர்களுக்கு துரோகம் செய்ய மாட்டேன்

## நடிகை நமீதா தெரிவிப்பு



கொழும்பில் நடைபெறவுள்ள இந்திய திரைப்பட விழாவில் பங்கேற்க வருமாறு நடிகை நமீதாவுக்கு ஐஃபா அழைப்பு விடுத்துள்ளது.இந்த அழைப்பை புறக்கணித்துள்ளதோடு,தமிழர் நலனுக்கு எதிரான எந்த நிகழ்விலும் நான் பங்கேற்கமாட்டேன் என்று நமீதா கூறியுள்ளார்.

ஐஃபா விழாவின் முதல்நாள் நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பு நடனமாட் நடிகை நமீதாவுக்கு ஐஃபா அழைப்பு விடுத்துள்ளது. இதற்காக பெரும் தொகை ஒன்றையும் வழங்க இலங்கை அரசு மற்றும் ஐஃபா நிர்வாகம் நமீதாவை அணுகியுள்ளது.

ஆனால், இந்த வாய்ப்பை அவர் ஆரம்பத்திலேயே மறுத்துவிட்டார். இது குறித்து நமீதா நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஐஃபா விழாவுக்காக என்னை சில தினங்களுக்கு முன்பே அணுகினார்கள். என்னை இந்த விழா வில் நடனமாட அழைத்தார்கள். அத ற்காக பெரும் தொகையும் தருவதாகச் சொன்னார்கள். ஆனால் இதற்கு நான் சம்மதிக்கவில்லை.இங்கே இந்த பிரச்சினை இருப்பது தெரிந்த பிறகும் எப்படி நான் போகமுடியும்.

எனக்கு சோறு போட்டது தமிழ் மக்கள் தான்.இன்று இந்த அந்தஸ்து வந்ததும் அவர்களால்தான். எனவே யாரும் சொல்வதற்கு முன்பே மறுத்துவிட்டேன். வாழவைத்த தமிழர்களுக்கு துரோகம் செய்ய மாட்டேன் என்று கூறியுள்ளார். (6)

# இந்திய திரைப்பட விழாவை மலையாள நடிகர்களும் புறக்கணிப்பு



இலங்கையில் எதிர்வரும் 3,4,5 ஆம் திகதிகளில் சர்வதேச இந்தியத் திரைப்பட விழா நடக்கிறது. ஈழத் தமிழர்களை கொன்று குவித்த இலங்கை நாட்டில் இவ்விழாவை நடத்தக் கூடாது என்று எதிர்ப்புக்கள் கிளம் பின. வேறு நாட்டுக்கு மாற்றும் படியும் வற்புறுத்தப்பட்டன. அது ஏற்கப்படவில்லை.

இதனையடுத்து இலங்கைப் படவிழா வுக்கு செல்லும் நடிகர்,நடிகைகள் வீடுகளில் முற்றுகைப் போராட்டங்கள் நடந்து வருகின்றன.

இந்தியாவில் இருந்து நடிகர்,நடிகைகள் யாரும் இலங்கை பட விழாவுக்கு செல்லக் கூடாது என்றும் மீறிச் சென்றால் அவர்கள் படங்களை தியேட்டர்களில் திரையிட தடை விதிக்கப்படும் என்றும் தென்னிந்திய திரைப் பட வர்த்தக சபை உள்ளிட்ட திரைத்துறையினர் எச்சரிக்கை விடுத்தனர்.

இவ்விழாவில் கலந்துகொள்வதில்லை என்று ரஜனி,கமல் ஆகியோர் ஏற்கனவே முடிவெடுத்துவிட்டனர். மணிரத்தினம் "ராவணன்" படத்தை இவ்விழாவில் திரையிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது. அவரும் தற்போதும் இவ்விழாவுக்குச் செல்லவில்லை.

ராவணன் படம் அடுத்த மாதம் ரிலீசாகிறது.இப் படத்துக்கு சிக்கல் வரும் என்பதால் அதில் நடித்த ஐஸ்வர்யாராய், அபிஷேக் பச்சன் ஆகியோரும் கொழும்பு பட விழாவை புறக்கணித்து விட்டனர்.

மலையாள சுப்பர்ஸ்டார் நடிகர்கள் மம்முட்டி,மோகன்லால், திலீப், தெலுங்கு நடிகர்கள் வெங்கடேஷ், நாகர்ஜுனா, புனித்ராஜ் குமார் ஆகியோரும் இலங்கை விழாவை புறக்கணித்துவிட்டனர்.

அமிதாப்பச்சனும் இவ்விழாவுக்கு போக மாட்டார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. படவிழாவில் கலந்துகொள்ளவிருந்த ஷாருக்கானும் தற்போது புறக்கணித்துவிட்டார். சொந்த வேலைகள் இருப்பதால் இவ்விழாவில் கலந்துகொள்ள இயலாது என்று அவர் கூறியுள்ளார்.

ஹிருத்திக் ரோசன் உள்ளிட்ட சில நடிகர், நடிகைகள் மட்டும் இலங்கை விழாவுக்குச் செல்ல முடிவு செய்துள்ளனர். அவர்களின் படங்கள் தமிழ்நாடு ,கேரளா, கர்நாடகா, ஆந்திரா, பாண்டிச்சேரி ஆகிய 5மாநிலங்களிலும் திரையிட தடைவிதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

# அமைதியை பரப்புவதே இலட்சியம்; தாக்குதலை கண்டு பயப்படமாட்டேன்

## ஸ்ரீஸ்ரீரவிசங்கர் பேட்டி

பெங்களூரில் உள்ள தனது ஆச்சிரமத்திலிருந்து காரில் சென்ற யோக குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரை மர்மநபர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டுள்ளார். ஆனால் அதிர்ஷ்டவசமாக காயமின்றி அவர் உயிர் தப்பினார். இதுகுறித்து அவர் தெரிவிக்கையில், நான் அமைதியை பரப்பி வருகிறேன். இது தான் எனது இலட்சியம். எனக்கென எதிரிகள் யாரும் இல்லை. எனது ஆச்சிரமத்தில் நடந்த சாஸ்தாங் நிகழ்ச்சியில் பங்கேற்ற ஒருவர் தான் என்மீது தாக்குதல் நடத்தியிருக்கலாம் என நினைக்கிறேன். இந்தத் தாக்குதலுக் கான காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. மற்ற மதரீதியிலான அமைப்பினர் யாரும் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டிருக்கவில்லை. நான் என்மீது தாக்குதல் நடத்த வந்தவனை ஏற்கனவே மன்னித்துவிட்டேன். தாக்குதல் நடத்த வந்தவனை என் ஆச்சிரமத்தில் சேர அழைக்கின்றேன். அகிம்சையே எப்போதும் வெற்றி பெறும் என்றார். (6)








பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஒட்டகப்புலம் சென்மேரிஸ் தேவாலயம் மக்களின் வழிபாட்டிற்காக நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கத்துருசிங்க நாடாவெட்டி திறந்துவைப்பதையும் பிரிகேடியர் றொட்ரிக்கோ உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவக செய்தியாளர்)

## சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் " மகாபாரதம்" என்னும் விடயம் பற்றி பொன்.சுகதந்தன் தொடர் சொற்பொழிவாற்றவுள்ளார். (4-35)

## பசுப்பால் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தால் குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான பசுப்பால் வழங்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் இ.குகன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

## நிறுவனத் தலைவர்களிற்கான மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச சார்பற்ற நிறுவனங்களிற்குமான யூன் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக்குழுக்கூட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்பதையும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது சமுகமளிக்குமாறும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார். (6)

## ஹ.சி.தாவீது அடிகளாரின் 29ஆவது ஆண்டு நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

ஞானம் தமிழ்த்தூது தாவீது மன்றத்தினால் அமரர் கலாநிதி ஹ.சி.தாவீது அடிகளாரின் 29ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு இல. 5, கோவில் வீதியில் அமைந் துள்ள யாழ்.அருள் ஆச்சிரமத்தில் கொண் டாடப்படவுள்ளதாக மன்றத்தின் செயலாளர் துரை ஆரோக்கியதாசன் அறிவித்துள்ளார். (4)

## அதிபர்கள் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களிற்கு இன்று நடத்தப்படவிருந்த செயலமர்வானது ஒத்திவைக்கப்பட்டு நாளை மறுதினம் வியாழக்கிழமை அன்று காலை 9 மணிமுதல் யாழ்ப்பாண வலயத்தில் இடம்பெறும் எனவும் மேற்படி செயலமர்வில் அனைத்து அதிபர்களையும் தவறாது பங்குபற்றுமாறும் வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (6)

## நெடுந்தீவிலுள்ள போனிக்குதிரைகளை பாதுகாப்பதற்கு துரித நடவடிக்கை



(நெடுந்தீவு)

நெடுந்தீவிலுள்ள போனிக் குதிரைகளைப் பாதுகாப்பதற்கு வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த தீவுப் பகுதியில் தற்போது சுமார் 500 போனிக் குதிரைகள் மாத்திரமே எஞ்சியுள்ளதாக அந்த திணைக்களம் சுட்டிக்காட்டியது.

யுத்த காலத்தின் போது குறித்த தீவுப் பகுதியில் தங்கியிருந்த கடற்படையினராலேயே இவை பாதுகாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வரட்சியான காலப் பகுதிகளில் மேற்படி போனிக் குதிரைகள் நீருக்காக பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாக குறித்த திணைக்களத்தின் தலைவர் எஸ்.பி. ரத்நாயக்க தெரிவித்தார். (6)

## நெல்சிப் கொத்தணி திட்டமிடல் குழுக்களுக்கான பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு உள்ளூராட்சி அபிவிருத்தி திட்ட (நெல்சிப்) செயற்பாடுகளுக்காக நல்லூர் பிரதேச சபையின் அனைத்துக் கிராம சேவகர் அலுவலர் பிரிவுகளும் 5 கொத்தணிகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றுக்கான கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டுள்ளன.

இக்கலந்துரையாடல்களில் ஒவ்வொரு கொத்தணிக்கும் ஒவ்வொரு திட்டமிடல் குழு அமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டமிடல் குழு அங்கத்தவர்களுக்கான நெல்சிப் தொடரான முழுநாள் பயிற்சிப்பட்டறை நாளை புதன்கிழமை காலை நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் நூலகக் கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்கள் அனைவரும் இதில்தவறாது கலந்துகொள்ளுமாறு நல்லூர் பிரதேச சபை செயலாளர் கேட்டுக்கொள்கின்றார். (6)




## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை கூட்டுறவு சங்க கலாசார மன்றம் வழங்கும் இசைநிகழ்வு இடம்பெறவுள்ளது. (4-35)

## புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை புற்றுநோய் கதிர்வீச்சு பிரிவின் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டி யாழ்.போதனா வைத்தியசாலையும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் இணைத்து புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்வொன்றை நடத்தவுள்ளன.

இந்நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி , கௌரவ விருந்தினராக மகரகம தேசிய புற்றுநோய் நிறுவக பணிப்பாளர் திருமதி யோகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (4-7)

## மாகாண மட்ட தமிழ்மொழித்தின அழகியல் போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாகாணமட்ட தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் அழகியற் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் மற்றும்பாடசாலைகளின் 'பெயர் விபரம் வருமாறு,

**வாசிப்பு**

பிரிவு-1

த.சாம்பவி(வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி), வெ. மேரிதிரேஸ் லெம்பேட்(மன்/புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயம்), க.கேணுகா (யா/அராலி சரஸ்வதி மகா வித்தி.

பிரிவு-2

ச.டிலக்ஷினி(வ/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தி) , சி.டிலக்சனா(யா/மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பாடசாலை), பொ.ஆன்நித்தியா(மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி).

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

பிரிவு-1

சி.நிறோஜன்(கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி,சி.புருஷாத்(வ/தமிழ் மத்திய மகா வித்தி, சி.கௌதமன்( கிளி/ஜெயபுரம் மகா வித்தி.

**பேச்சு**

பிரிவு-1

த.அபிநாத்( யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), மா.டிலோஜினி(வ/நெளுக்குளம் கலைமகள் மகா வித்தி), க.பிரவின்(மு/காமினி மகா வித்தி

பிரிவு-2

தி.கீர்த்தனா(கிளி/கிளிநெச்சி இந்துக் கல்லூரி), சி.மதுஷனா( யூனியன் கல்லூரி), பி.பிரசாந்தினி( மு/பாலிநகர் மகா வித்தி.

பிரிவு-3

ந.சாமந்தி( மு/காமினி மகா வித்தி,இரா. மரிய துஷாந்தி (மன்/தலைமன்னார் பியர் அ.த.க.பாடசாலை), ஆ.ஹரிசங்கர்(யா/இந்துக் கல்லூரி).

பிரிவு-4

பி.ஜான்சிராணி(மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), செ.கௌசிகா( மு/காமினி மகா வித்தி,இ.தனுசிகா (வ/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தி.

பிரிவு-5

க.வசீகரன்(யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), வி.ஆன்டினுசியா ( வ/இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தி , வே.திசுபா (மன்/அடம்பன் மகா வித்தி.

**பாவோதல்**

பிரிவு-1

இ.கிருஷிகா( மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி),கு.நிர்மயா( சைவப் பிரகாச மகளிர் கல்லூரி), பி.ஷன்சிகா(மு/யோகபுரம் மகா வித்தி.

பிரிவு-2

ர.யதுசா( யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கி.ஜெனிபர் (மன்/சென்மேரிஸ் பெண்கள் வித்தி) , தெ.மிதிலைமாறன்(வ/புதுக்குளம் மகா வித்தி.

பிரிவு-3

நெ.அனற்றிசானா( மன்/அடம்பன் மகா வித்தி, உ.ரசிந்தா ( யா/கோண்டாவில் இந்து மகா வித்தி),சி.டண்சினி (கிளி/ கிளிநெச்சி இந்துக் கல்லூரி).

பிரிவு-4

ம.சைலாதேவி( வ/ஸ்ரீநாகராஜா வித்தி, சி.யதூர்த்தனி(மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி),நி.சாமந்தி(யா/நெல்லியடி மத்திய மகா வித்தி

பிரிவு-5

செறின் சியாமளா( மன்/சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), சு.வத்சலா(யா/இந்து மகளிர் கல் லூரி), செ.குணவதி( வ/கல்மடு மகா வித்தி). (தொடரும்)

# திரைப்பட தயாரிப்பாளர் சந்திரன் ரட்னம் நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை

(கொழும்பு)

இலங்கையின் திரைப்படத் தயாரிப்பாளரும் பணிப்பாளருமான சந்திரன் ரட்னம் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு எதிராக எந்தவித குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படாத நிலையிலேயே கங்கொடவில நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

நுகேகொடவிலுள்ள தனது வீட்டில் இவர் வெடிபொருள்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த வாரம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாக்கப்பட்ட அவர் மீது பொலிஸார் எவ்வித குற்றச்சாட்டுக்களையும் முன் வைக்காத நிலையில் அவரை நீதவான் விடுதலை செய்தார்.

திரைப்பட தயாரிப்பாளர் என்ற வகையில் அவர் வெடிப்பொருட்களை வைத்திருக்கும் அனுமதியை பெற்றுள்ளதாக பிரதிவாதியின் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் வாதிட்டார். இதன் போதே பொலிஸார் தமது குற்றச்சாட்டுகளை திரும்பப் பெற்றுக்கொண்டனர்.

இலங்கையின் யுத்தத்தை மையமாக வைத்து ஆனையிறவுக்கான பாதை என்ற திரைப்படத்தை சந்திரன் ரட்னம் தயாரித்திருந்தார்.

இத்திரைப்படத்தை தயாரிப்பதற்காக பாதுகாப்பு அமைச்சிலிருந்து பெற்றிருந்த விசேட உரிமத்தை சந்திரன் ரட்னம் நீதிமன்றத்தில் சமர்பிக்கத்தவறியிருப்பதாகப் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (6-4)

# யாழ். பல்கலைக்கழகத்திற்கு தெரிவாவோர் அங்கேயே கல்வியை தொடரவேண்டும்

## பல்கலை. மானியங்கள் ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

கடந்த உயர்தரப் பரீட்சைப் புள்ளிகளுக்கமைய இம்முறை யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாவோர் அங்கேயே கல்வியைத் தொடரவேண்டுமெனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள் ளது.

இதற்கு முன்னர் காணப்பட்ட நிலைமையில் யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான வெளி மாவட்ட மாணவர்கள் வேறு பல்கலைக்கழகங்களுக்கு மாற்றப்பட்டதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க குறிப்பிட்டார்.

இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை ஆயிரத்தால் அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அதற்கேற்ப யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு 100 மாணவர்கள் சேர்த்துக் கொள் ளப்படவுள்ளனர்.

யாழ். மாவட்டத்திற்கு வெளியிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் மற்றும் சிங்கள மாணவர்கள் இதுவரை காலமும் வேறு பல் கலைக்கழகங்களில் அனுமதி பெற்றிருந் தனர்:இதற்குப் போக்குவரத்து முக்கிய காரண மாக முன்வைக்கப்பட்டது.

எனினும் ஏ-9 வீதி திறக்கப்பட்டு போக்குவரத்து நடவடிக்கைகள் வழமைக்குத் திரும்பியுள்ளதைக் கவனத்திற்கொண்டு இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (4-6)

# சர்வதேச இந்திய திரைப்பட விழாவிற்கு மும்பாயிலிருந்து 50 தொழில்நுட்பவியலாளர்கள் வருகை

இம்மாதம் நடைபெறவுள்ள சர்வதேச இந்திய திரைப்பட விழாவிற்காக மும்பாயிலிருந்து 50 தொழில் நுட்பவியலாளர்கள் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் விசேட விமானத்தின் மூலமாகவே நேற்று முன்தினம் காலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர் என விழா ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இந்த விழாவில் பங்கேற்பதற்காக இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச இந்திய திரைப்பட விருது வழங்கும் விழாவின் ஆரம்ப வைபவம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் நட்புறவு கிரிக்கெட் சுற்றுப் போட்டி கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்திலும் விருது வழங்கும் விழா சுகததாச விளையாட்டரங்கின் உள்ளக அரங்கிலும் நடைபெறவிருக்கின்றது.

இவ் இறுதி நாள் நிகழ்வில் பங்கேற்பதற்காக இந்தியாவிலிருந்து வருகை தரவிருக்கின்ற திரையுலக நட்சத்திரங்களை பண்டாரநாயக்க ரயில் நிலையத்திலிருந்து மருதானை வரை ரயிலில்அழைத்து வருவதற்கும் ஏற்பாடுகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன .

எனவே விருது வழங்கும்நாளன்று ஆமர் வீதி சந்தியிலிருந்து இங்குறுகொட சந்தி வரைக்குமான பிரதான வீதி மூடப்பட்டிருப்பதுடன் மருதானையிலிருந்து ஆமர் வீதி சந்தி வரைக்குமான வீதியில் மட்டுப்படுத்தப்பட்ட வாகனங்கள் மட்டுமே பயணிக்க அனுமதி யளிக்கப்படும் என்று போக்குவரத்து பொலிஸார் அறிவித்துள்ளனர். (6)

பாராட்டி வாழ்த்துகிறோம்



பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட அமைச்சர்



மாண்புமிகு கே. என். டக்ளஸ் தேவானந்தா

அவர்களை வாழ்த்துவதோடு அவரின் பணி மேலும் சிறக்கவும் அவரோடு இணைந்து சேவை புரியும் **அம்பலவாணர் ரவீந்திரதாசன், துரைசிங்கம்** (ஜே.பி.) மற்றும் ஏனைய அன்பு உள்ளங்களையும் மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அமரகவி மாதர் அபிவிருத்திச் சங்கம்,
பாரதி வீதி,
கோண்டாவில் வடமேற்கு,

(1608)

# 01.06.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 193-ரோமப் பேரரசர் டிடியஸ் ஜுலியானஸ் படுகொலை செய்யப்பட்டார்.
- 1215-மொங்கோலியப் பேரரசன் செங்கிஸ் கான் பீஜிங் நகரைக் கைப்பற்றினான்.
- 1485-ஹங்கேரியின் மத்தாயஸ் வியன்னாவைக் கைப்பற்றினான்.
- 1533-ஆன் பொலெய்ன் இங்கிலாந்தின் அரசியாக முடி சூடினாள்.
- 1605- மொஸ்கோவில் ரஷ்யப் படைகள் மன்னன் இரண்டாம் ஃபியோதரையும் அவனது தாயாரையும் சிறைப்பிடித்தனர். இவர்கள் பின்னர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1792-கென்டக்கி ஐக்கிய அமெரிக்காவின் 15ஆவது மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- 1796-டென்னசி ஐக்கிய அமெரிக்காவின் 16ஆவது மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
- 1812-அமெரிக்க அதிபர் ஜேம்ஸ் மாடிசின் ஐக்கிய இராச்சியம் மீது போரை அறிவிக்கும் படி காங்கிரசைக் கேட்டுக் கொண்டார்.
- 1831-ஜேம்ஸ் றொஸ் வட முனையைக் கண்டுபிடித்தார்.
- 1855-அமெரிக்க நாடுகாண் பயணி வில்லியம் வோக்கர் நிக்கராகுவாவைக் கைப்பற்றினார்.
- 1869-மின்சாரத்தால் இயங்கும் வாக்களிக்கும் இயந்திரத்துக்கான காப்புரிமத்தை தோமஸ் எடிசன் கைப்பற்றினார்.
- 1879-பிரஞ்சு இளவரசன் நெப்போலியன் யூஜின் ஆங்கிலோ-சூளு போரில் தென்னாபிரிக்காவில் கொல்லப்பட்டான்.
- 1910-றொபேர்ட் ஸ்கொட் தலைமையிலான ஆய்வுக்குழு தென் முனையை நோக்கிய பயணத்தை இங்கிலாந்தில் இருந்து ஆரம்பித்தது.
- 1941-ஈராக், பக்தாத்தில் யூதர்களுக்கெதிராக இடம்பெற்ற கலவரங்களில் 180 யூதர்கள் கொல்லப்பட்டனர்.
- 1946-ருமேனியாவின் பிரதமராக இயன் அண்டனேஸ்கு பதவியேற்றர் மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டார்.
- 1947-சுதந்திரன் இதழ் கொழும்பில் இருந்து வெளியாக ஆரம்பித்தது.
- 1959-நிக்கராகுவாவில் புரட்சி ஆரம்பமானது.
- 1962- நாசி வதைமுகாம்களை உருவாக்கிய அடொல்ஃப் ஐக்குமான் இஸ்ரேலில் தூக்கிலிடப்பட்டார்.
- 1964-சிறேதொகோ தேசிய வனம் ஜப்பானில் அமைக்கப்பட்டது.
- 1978-டோக்கியோ பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் ஆரம்பமாகின.
- 1979- 90 ஆண்டுகளுக்குப் பின்னர் ரொடீசியாவில் முதற் தடவையாக கறுப்பினத்தவர்களின் அரசு பதவியேற்றது.
- 1980-சி.என்.என் ஒலிபரப்புச் சேவையை ஆரம்பித்தது.

### சிறப்பு நாள்

- சர்வதேச குழந்தைகள் தினம்
- சமோவா-சுதந்திர தினம் (1962)
- துனீசியா-அரசியல் நிர்ணய நாள்,வெற்றிநாள்(1959)

2001-மன்னர் பிரேந்திரா பீர் விக்ரம் சாஹ் தேவ் 1972 முதல் 2001 இல் இறக்கும் வரை நேபாளத்தின் மன்னராக இருந்தவர்.ஜுன் 1,2001 இல் மன்னர் மாளிகையில் இடம் பெற்ற ஒரு துப்பாக்கிச்சூட்டு நிகழ்வில் மன்னர் பிரேந்திரா, அவரது மனைவி, பிள்ளைகள் இருவர் மற்றும் சில குடும்ப உறுப்பினர்கள் உட்பட ஒன் பதுபேரை பிரேந்திராவின் மகன் இளவரசர் தீபேந்திரா சுட்டுக்கொன்றார்.





யாழ். மத்திய கல்லூரியின் வணிக மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் நடத்தப்பட்ட க.பொ.த. உயர்தர கணக்கீட்டு மாணவர்களுக்கான கருத்தரங்கு நிகழ்வில் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் வி.ஒங்காரமூர்த்தி உரையாற்றுவதையும் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் கிங்ஸிலி கருணாரட்ண கருத்தரங்கை நடத்துவதையும் விரிவுரையாளர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் எதிர்வரும் நாட்களில் காலநிலை அனர்த்தங்கள் அதிகரிக்கக்கூடும்

**வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு**

இலங்கையில் எதிர்வரும் நாட்களில் கால நிலையினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் உயர்வடையக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் மக்கள் முன் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியது அவசியமானதென அவர் குறிப்பிடப்படுகிறது.

இயற்கை அனர்த்தங்களின் காரணமாக வழமையான காலநிலையை விடவும் மாறுபட்ட காலநிலை ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரத்தில் ஏற்பட்ட கடும் மழை இவ்வாறான ஓர் அசாதாரண நிலைமையின் வெளிப்பாடே என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பருவப் பெயர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட காலநிலை மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது எனவும் முற்றிலும் மாறுபட்ட மோசமான அனர்த்தங்கள் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் 100 வீதம் சரியான எதிர்வு கூறல்களை வெளியிட முடியாது எனவும் இதனால் அனர்த்தங் கள் தொடர்பில் முன் எச்சரிக்கையுடன் செயற்படுவது அவசியமானதெனவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# கடந்த ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு சீர்திருத்தம் தொடர்பான நடவடிக்கை இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு திருத்தத்தை இன்று முதல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

மேலும் 2009 ஆம் ஆண்டிற்கான இந்த வாக்காளர் இடாப்பு திருத்தம் சகல மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும். 2010ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தல்கள் யாவும் 2008ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின் பிர காரமே மேற்கொள்ளப்பட்டன எனினும் அடுத்த தேர்தல்கள் 2009 ஆம் ஆண்டு வாக்களார் இடாப்பின் பிரகாரமே நடத்தப்படும் என்றும் தேர்தல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே இவ் வாக்காளர் இடாப்பை திருத்துவதற்கான படிவங்கள் மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் இன்று முதல் கிராமசேவர்களினால் வீடுகளுக்கு கையளிக்கப்படும் என்றும் செயலகம் அறிவித்துள்ளது.

(4-6)

# இலங்கையை சேர்ந்த 7300 பேருக்கு தென்கொரியாவில் வேலைவாய்ப்பு

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

தென் கொரியாவில் அதிகளவான இலங்கையர்களுக்கு விரைவில் வேலைவாய்ப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி இலங்கையைச் சேர்ந்த 7 ஆயிரத்து 300 பேருக்கு தென்கொரியாவில் விரைவில் வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறும் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தொழில்வாய்ப்பு விசாக்களை வழங்கும் போது அதிகூடிய இரண்டாவது சந்தர்ப்பத்தை இலங்கைக்கு தென்கொரியா வழங்கியுள்ளது.

தென்கொரியா வருடாந்தம் 15 நாடுகளுக்கு தொழில் விசாக்களை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 2 ஆயிரத்து 300 இலங்கையர்களுக்கு தென்கொரியாவில் வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பிலான ஒப்பந்தமொன்று கடந்த வருடம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

ஆட்களை சேர்க்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடான யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் இராணுவத்திற்காக ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளது.

எனினும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் முழுமையாக கைவிடப்படமாட்டாது என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இராணுவத்தில் தற்போது 2 இலட்சம் உத்தியோகத்தர்கள் மற்றும் படையதிகாரிகள் அங்கம் வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2006 ஆம் ஆண்டுக்கு முன்னைய காலத்தை விடவும் அதிகளவான படைவீரர்கள் எதிர்வரும் காலத்தில் படையில் இணைத்துக்கொள்ளப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் பதவிக் காலத்தில் சுமார் 80 ஆயிரம் படைவீரர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய படை பலத்தை தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் தொடர்ச்சியாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாக இராணுவப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடற்படை வான் படை மற்றும் சிவில் பாதுகாப்புப் படைகளும் கடந்த காலங்களில் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் முழுமையாக பூர்த்தி அடைந்ததன் பின்னர் படை பலத்தை அதிகரிப்பது குறித்த அரசாங்கத்தின் தீர்மானம் மீளாய்வு செய்யப்படும் என அவர் உயர் அதிகாரியொருவருக்கு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இராணுவத்திலிருந்து தப்பியோடிச் சென்றவர்கள் கௌரவமான முறையில் படையிலிருந்து விலகிச் செல்வதற்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜுன் மாதத்தில் பானாகொடை முகாமில் படைவீரர்கள் இவ்வாறு உத்தியோகபூர்வமாக பதவி விலக முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (4-6)

# இலங்கையில் சரியானமுறையில் மீள்குடியேற்றம் இடம்பெறுவதனை உறுதி செய்ய வேண்டும்

## இந்திய மத்திய அரசிடம் கருணாநிதி கோரிக்கை



(கொழும்பு)

இலங்கை இடம்பெயர் மக்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கம் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக முதல்வர் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் இது வரை காலமும் இந்திய மத்திய அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் திருப்தி அளிக்கும் வகையில் அமையப் பெறவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பில் திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகின்ற போதிலும் இந்திய மத்திய அரசாங்கம் உரிய கவனம் செலுத்தாமை வருத்தமளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் சரியான முறையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெறுவதனை இந்திய மத்திய அரசாங்கம் உறுதி செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு போதியளவு நிவாரணங்கள் சென்று சேர்வதனை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த தவறியுள்ளதாக அவர் மேலும் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை மலேசியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 75 தமிழர்களையும் விடுதலை செய்யுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (6-4)

# கடை நிலையிலிருந்து ஐ.தே.கவின் மறுசீரமைப்பு நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

கடை நிலையிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் தொகுதி மற்றும் மாவட்ட கட்டமைப்புக்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

கட்சியின் மறுசீரமைப்பு குழு தொடர்ச்சியாக ஆய்வுகளை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாணசபைகள் உள்ளூராட்சி மன்றங்களினது உறுப்பினர்களுடன் விசேட சந்திப்புக்களை நடத்தி அவர்களது கருத்துக்கள் கேட்டறியப்படவுள்ளன.

கட்சி மறுசீரமைப்பு தொடர்பான கருத்துக்கள் அறியப்பட்டு குறித்த பரிந்துரைகள் மீண்டும் செயற்குழுவிடம் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளதாக மறுசீரமைப்பு குழுவின் உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

கடை நிலையிலிருந்து கட்சியின் கட்டமைப்பை மாற்றியமைப்பதே தமது நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(6-4)

# வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான வரிவிலக்கு அனுமதி இந்த வாரம் வழங்க தீர்மானம்

(கொழும்பு)

புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் வாகனங்களை இறக்குமதி செய்து கொள்வதற்கான வரிவிலக்கு அனுமதி இந்த வாரத்தில் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஆகக் கூடியது 50ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதி வரையிலான வாகனங்களை உலக சந்தையிலிருந்து இறக்குமதி செய்ய முடியுமென பாராளுமன்ற விவகார அமைச்சர் சுமேதா ஜயசேன தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதிக்காக 18 வீதமான வரியை மட்டுமே செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.புதிதாக பாராளுமன்றிற்கு தெரிவானவர்கள் மற்றும் ஐந்தாண்டுகள் பாராளுமன்றத்தில் சேவையாற்றியவர்கள் ஆகியோருக்கு இந்த சலுகை வழங்கப்படவுள் ளது.

அண்மைய ஆண்டுகளில் மாகாண சபைகளில் அங்கம் வகிக்கும் போது இந்தச் சலுகையைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு மீளவும் தற்போது இந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பாராளுமன்றத்தில் இறுதிக் கால கட்டத்தில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கும் இம்முறை வாகன அனுமதிப்பத்திரம் வழங்கப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டார். (6-4)

# தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை -2010

ஆசிரியர்கள்:- ரி.திலீப்குமார்
ரி.மன்மதகாந்தன்

## மாதிரி பரீட்சை—05
## வினாத்தாள் —I

நேரம்-45 நிமிடம்

**1 தொடக்கம் 39 வரையான வினாக்களிற்கு சரியான விடையை தரப்பட்ட மூன்று விடைகளிடையே தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

முதல் உருவிற்கு சமனான உருவைத் தெரிவு செய்க.

1. 

(1) (2) (3)

2. 

(1) (2) (3)

**ஒவ்வொரு பாடலிலும் உள்ள வெற்றிடத்திற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

3. இரும்புப் பாதை மேலோடி
எம்மைச் சுமந்து சென்றிடுமாம்
விருப்பத்தோடு.....
வேண்டும் இடங்கள் சென்றிடலாம்

1. நாமேறி 2.நாமிறங்கி 3. நாமோடி

4. பாலைப் பொழிந்து தரும் -பாப்பா
அந்த---- மிக நல்லதடி பாப்பா

1. நாய் 2. பசு 3. பூனை

**5. பின்வரும் உருக்களில் விடுபட்ட பகுதிக்கு பொருத்தமான பகுதியை தரப் பட்ட விடையிலிருந்து தெரிக.**



6. 

**கீழே தரப்பட்டிருப்பது ஒரு கடதாசியை இரண்டு தடவை புள்ளிக் கோட்டின் வழியே மடித்து ஒரு பக்கத்தில் முக்கோண வடிவில் துண்டொன்று வெட்டி எடுக்கப்பட்டிருக்கும் தோற்றமாகும்.**



இக் கடதாசியை விரித்தால் தோண்றும் சரியான தோற்றம்



(1) (2) (3)

**கீழே ஒரு சதுரமுகியில் A தொடக்கம் F வரை ஆங்கில எழுத்துக்கள் எழுதப்பட்ட பின்னர் மூன்று நிலைகளில் வைக்கும் போது ஆங்கில எழுத்துக்கள் தோன்றும் விதத்தை கீழே உள்ள உருக்கள் காட்டுகின்றன.**




இதன் படி,

8. Aயிற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள எழுத்து
1. D 2. E 3. C

9. B யிற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள எழுத்து
1. E 2. D 3. C

10. ரவி தரம் 5இல் கல்வி கற்கும் பாடசாலை மாணவன். ஆனால் அவன் பாட சாலைக்கு ஒழுங்காகச் செல்வதில்லை. அவ்வாறு அவன் பாடசாலைக்குச் சென்றாலும் படிப்பில் கவனம் செலுத்துவதில்லை. சகமாணவருக்கு தொல்லை கொடுப்பான். சகமாணவரோடு சண்டைபோடுவான். இதன்படி ரவி தொடர்பாக நாம் எடுக்கக் கூடிய முடிபு.

1. படிப்பில் கெட்டிக்காரன்
2. ஒழுக்கமற்றவன்
3. துணிந்தவன் .

11. ரமேஸ் பாடசாலை மைதானத்தில் சிறு தொகைப் பணத்தைக் கண்டெடுத் தான். அவன் அதனை அதிபர் மூலமாக உரியவரிடம் கொடுத்தான். ரமேஸ் தொடர்பாக நாம் குறிப்பிடக்கூடிய கூற்று,

1. புகழை விரும்புவன்
2. பயந்தவன்
3. நேர்மையானவன்

**12ஆம் 13ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள முதற் படங்களை மேலிருந்து பார்க்கும் போது அது தோற்றமளிக்கும் விதத்தைக் காட்டும் சரியான உருவை விடையிலிருந்து தெரிவு செய்க.**

12. 

(1) (2) (3)

13. 

(1) (2) (3)

**பின்வரும் உருவில் ஒவ்வொரு கட்டமும் ஒரு சதுர சென்றிமீற்றர் பரப்பளவு கொண்டவை. இவற்றை அடிப்படையாகக் கொண்டு 14ஆம், 15ஆம் வினாக்களுக்குரிய சரியான விடை யின் கீழ் கோடிடுக.**



14. நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரசென்ரி மீற்றர் ?
1. 12 2. 10 3. 9

15. நிழற்றப்பட்ட பகுதியின் சுற்றளவு யாது?
1. 27 2. 25 3. 22

**16ஆம், 17ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பட வரிசையில் வெற்றுக் கூட் டிற்கு பொருத்தமான படத்தை விடையில் இருந்து தெரிவு செய்க**

16. 



(1) (2) (3)

17. 



(1) (2) (3)

18. 18ஆம், 19ஆம் வினாக்களிற்கு முதலில் தரப்பட்டுள்ள உருவிற்கு பொருத்தமான நிழலைக் காட்டும் உருவின் கீழ் கோடிடுக.



1 2 3

19.



(1) (2) (3)

❋ A,B,C ஆகிய விற்றராசுகளில் மரத்தால் செய்யப்பட்ட சில திண்ம உருக்கள் இடப்பட்டுள்ளன. அவற்றின் நிறைய அத்தராசு காட்டுகின்றது. அவற்றை அடிப்படையாகக் கொண்டு 20ஆம், 21ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.



A B C

இதன்படி

20.  ஒன்றினுள் நிறை யாது?

1.3 Kg 2. 2 Kg 3. 1 Kg

21.  இன் நிறை யாது?

1.4 Kg 2. 5Kg 3. 6Kg

❋ முதலாவது படத்தில் காட்டப்பட்டுள்ள நீர் கொண்ட கண்ணாடி பாத்திரத்தை சிறிது சரித்தால் நீர்மட்டம் தோன்றும் சரியான விதத்தை விடையில் இருந்து தெரிவு செய்க.

22.



(1) (2) (3)

23. (⟶) அம்புக்குறி காட்டிய திசையில் காற்று வீசுகிறது எனில் மெழுகுதிரியின் சுடரின் நிலையைக் காட்டும் சரியான விடையினைத் தெரிவு செய்க.



1 2 3

❋ சுதன் , மதன், நேசன், விஸ்ணு ராஜா ஆகியோர் பாடசாலைக்கு சமூகமளித்த நேரம் கீழே தரப்பட்டுள்ளது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு 24ஆம் , 25ஆம் வினாக்களுக்கு விடையினைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| சுதன் - | 7.13 |
| மதன்- | 7.28 |
| நேசன் - | 7.03 |
| விஸ்ணு- | 7.18 |
| ராஜா | 7.21 |

24. பாடசாலைக்கு முதலில் வந்தவரிலிருந்து இறுதியாக வந்தவர் வரை ஒழுங்காக காணப்படும் விடை

1. நேசன் , சுதன், ராஜா,விஸ்ணு, மதன்
2. நேசன்,சுதன், விஸ்ணு, மதன், ராஜா
3. நேசன், சுதன் ,விஸ்ணு, ராஜா, மதன்

25. பாடசாலைக்கு முதலில் வந்தவருக்கும் இறுதியாக வந்தவருக்கும் இடையிலான நேர வித்தியாசம் யாது?

1. 25 நிமிடம் 2.17 நிமிடம் 3.10 நிமிடம்

26. சுரேஸ் உதைபந்தாட்டத்தையும் கிரிக்கெட்டையும் விரும்புகின்ற போதிலும் எல்லே விளையாட்டை விரும்பவில்லை. ஹசிம் எல்லேயையும் உதைபந்தாட்டத்தையும் விரும்புகின்ற போதிலும் கிரிகெட்டை விரும்பவில்லை. அன்டனி உதைபந்தாட்டத்தையும் பூப்பந்தாட்டத்தையும் விரும்புகின்றான். இதில் மூவரும் விரும்புகின்ற விளையாட்டு.

1. கிரிக்கெட் 2. எல்லே 3. உதைபந்து

27. எனது அண்ணா தன்னிடம் இருந்த ஒரு தொகை மாபிள்களில் 1/2 பங்கை எனக்குத்தந்தார். பின்னர் எஞ்சியதில் 1/2 பங்கை தங்கையிடம் கொடுத்தார். தற்போது எஞ்சியிருப்பது 9 மாபிள்களாகும். முதலில் அண்ணனிடம் இருந்த மொத்த மாபிள்கள் எத்தனை?

1. 18 2.36 3.72

28. பாலனின் தாயாரின் சகோதரனின் மனைவிக்கு பாலன் என்ன முறை?

1. மாமி 2. மருமகன் 3. சிறிய தாயார்

29. சிவனின் வயது 14 .கரன் சிவனிலும் 6 வயது மூத்தவன். சுரேன் கரனிலும் பார்க்க 5 வயது இளையவன் எனின் சுரேனின் வயது எத்தனை?

1.20 வயது 2.18 வயது 3. 15 வயது

❋ 30ஆம், 31ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருவிற்கு பொருத்தமான சொற் கூட்டத்தை தெரிவு செய்க.

30. 

1. சுத்தம், துடைத்தல் , தும்பு
2. ஈர்க்கு, சுத்தம், துடைத்தல்
3. கூட்டுதல், ஈர்க்கு, சுத்தம்

31. 

1. பாக்கு , வெட்டுதல், இரும்பு
2. பாக்கு, வெட்டுதல் , மரம்
3. கம்பி, வெட்டுதல், இரும்பு

32. விக்ரம் 90 தொடக்கம் 99 வரையிலான எண்களை எழுதும் போது எத்தனை தடவை 9 என்ற இலக்கத்தை எழுதி இருப்பான்?

1. 11 2. 10 3.9

33. ஒரு குறித்த எண்ணுடன் 2 ஐ கூட்டி 2 ஆல் பெருக்கி 4யை கழிக்க வரும் விடை 14 ஆகும். எனவே அக் குறித்த எண் யாது?

1. 5 2. 7 3. 11

34. ஒரு பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இரண்டு கொப்பிக்கு ஒரு பேனா வீதம் வழங்கப்பட்டது. கொப்பியும் பேனாவுமாக மொத்தம் 600 வழங்கப்பட்டது எனின் எத்தனை பேனாக்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது?

1. 150 2. 200 3. 300

35. பாமாவிடம் சில நிறப் பேனாக்கள் உள்ளன. அதில் இரண்டைத் தவிர மீதி சிவப்பு நிறம். இரண்டைத் தவிர மீதி நீல நிறம். இரண்டைத் தவிர மீதி கறுப்பு நிறம். பாமாவிடம் உள்ள பேனாக்கள் எத்தனை?

1. 6 2. 4 3. 3

❋ 36 ,37ஆம் வினாக்களுக்கு சில சம்பவங்கள் ஒழுங்கற்று தரப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் சரியான ஒழுங்கைக் காட்டும் விடையின் கீழ் கோடிடுக.

36. 1. விடைத் தாள்களை ஆசிரியரிடம் கொடுத்தான்
2. சுட்டெண்ணை எழுதினான்
3. விடைகளை எழுதினான்
4. வினாத் தாள்களை வாங்கினான்
5. மீள் பார்வை செய்தான்

1. 4 ,2 ,3, 1 ,5 2. 4,2,3,5,1 3. 4,2,5,3,1

37. 1. வயிற்றுப்பகுதியை மெதுவாக அழுத்தினார்
2. மயக்கம் தெளிந்தது
3. குப்புற படுக்க வைத்தார்
4. வாயிலிருந்து நீர் வெளியேறியது
5. கிணற்றிலிருந்து தூக்கினார்

1. 5,2 ,1, 4 ,2 2. 5,3,1,2,4 3. 5,3,2,1,4

38. விமானம் என்ற சொல் 4837 எனும் குறியீட்டால் எழுதப்பட்டது. எனின் அம்மா சொல்லை குறிக்கும் குறியீடு யாது?

1.158 2.185 3. 178

39. மதம் ⟶ தவம் ⟶ வலம் ⟶ [ ] வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்

1. வலம் 2. லட்டு 3. மனம்

❋ ஒரு கிராமத்தில் வீடு, கோவில், பாடசாலை, தபாலகம் என்பன அமைந்துள்ள விதங்களை காட்டும் படம் கீழே காட்டப்பட்டுள்ளது. அவ் வரிப்படத்தில் 3 kmக்கு தூண் நடப்பட்டுள்ளது. இதனை அவதானித்து 40 ஆம் ;வினாவிற்கு விடை தருக.



40. வீட்டில் இருந்து பாடசாலைக்கான தூரம் எத்தனை கிலோ மீற்றர்?

# நடமாடும் பல்கலைக்கழகமாக திகழ்ந்த தாவீது அடிகள்

" ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்"

வள்ளுவனின் வாக்குக்கு வரைவிலக்கணம் கலாநிதி தாவீது அடிகள். இவர் பருத்தித்துறையில் தும்பளையைச் சேர்ந்த மாவச்சை என்னும் கிராமத்தில் 1907.06.28 இல் தாவீதுப்பிள்ளை எலிசபெத்து அம்மையின் பெரும் தவத்தால் கருவிலே திருவுடையராகப் பிறந்தார்.

எழில் மிக்க செவ்விளநீர் நிறம், புன்னகை பூத்து பொலிவோடு விளங்கும் முகம், ஞானக் குறியாகத் தோன்றும் வெண்ணிறக் குறுந்தாடி, அறிவொளி அவாவும் கண்கள் , எடுப்பான கூரிய மூக்கு, ஈகையால் வள்ளல் பாரியை மிஞ்சும் கரங்கள், உருவத்தில் குறுமுனி அகத்தியர், நெப்போலியன் போன்று அபூர்வ ஞாபகசக்தி மிக்கவர், நேரத்தை உயிர் போன்று செயலுருவப்படுத்தியவர், ஒழுங்கும், சிக்கனமும் இவருக்கு இரு கண்கள் போன்றவை.

"கருவறை தொடக்கம் கல்லறை வரை கற்க" என்பதற்குச் சான்றாகத்திகழ்ந்தவர் தாவீது அடிகள் என்றால் அது மிகையாகாது. இவர் தொல்காப்பியம் எனும் பழந்தமிழ் இலக்கணத்தைச் சார்ந்த எழுநூறு பக்க நூல் ஒன்றை இயற்றி திராவிட மொழிகளில் கலாநிதி என்று பட்டமும் இந்து - ஐரோப்பிய அன்றேல் இந்து- ஆரிய பாஷைகளில் எம். ஏ.பட்டமும் பெற்றார். தாவீது அடிகள் 35 மொழிகளில் வல்லுநராகவும் 100 க்கு மேற்பட்ட இதர மொழிகளில் பரீட்சயமுடையவராகவும் திகழ்ந்தார்.

ஒரு பூரண பல்கலைக்கழகம் ஆற்ற வேண்டிய பாரிய பணியைப் பணவலிமை குன்றியிருந்தும், மனவலிமை குன்றாமற் குருவாகவும் முழுநேர ஆசிரியராகவும் ஆற்றிக்கொண்டே அரை நூற்றாண்டு காலம் மொழி ஆராய்ச்சியில் கடினமாக உழைத்தார் இவர்.

ஒப்பியல் அகராதியின் ஒன்பதாவது பகுதியைச் சிங்கள மொழியில் தாவீதடிகள் எழுதத் திட்டமிட்டார். இதனால் தேசிய ஒருமைப்பாடு உருவாகுமென உணர்ந்து உழைத்த உத்தமராவார் "தொல் திராவிடம்" அன்றேல் சீரிய சிறந்த (தாமீழ) மொழியை விளக்கிச் சாதனை நிலைநாட்டிய மாமேதை இவர்.

அதுமட்டுமல்லாது சிங்களம் தமிழின் தங்கை என்று ஆதாரபூர்வத்துடன் நிரூபித்துக்காட்டிய முதல் அறிஞர் தாவீது அடிகள்.

கி.மு. 100 ஆம் ஆண்டளவில் தோன்றிய கலித்தொகை, குறுந்தொகை போன்ற நூல்களில் வரும் 'யாழ்','யாழ'என்ற சொற்கள் காதலன்-காதலியை, தோழன்- தோழியை அழைப்பதாக வருகின்றது என்றும் எனவே தமிழ் 'யாழ', 'யாழ்' என்ற சொற்களிலிருந்து

## கலாநிதி தாவீது அடிகளின் 29ஆவது நினைவு தினம் இன்றாகும்

தான் சிங்கள 'யாமுவா' பிறந்தது என்றும் இங்ஙனம் 4000 பதங்கள் சிங்களத்திற்கும் தமிழுக்கும் பொதுவானவை என்பதை அறிஞரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டிய தமிழ் பேரறிஞர் தாவீது அடிகளே. சொற்பிறப்பு, ஒப்பியல் துறையில் இவர் ஒரு மைல்கல்.

தாவீது அடிகளின் மொழி ஆராய்ச்சியில் 'தமிழ் எளுவ' கூறியதை சிறிது நோக்கின் உண்மை விளங்கும். பின்வரும் பகுதியை உதாரணமாகக் கொள்ளலாம். தமிழ் 'இலங்கை' யை ' லங்கா'எனவும், தமிழ் 'இளமையனை' 'ளமயா' எனவும் தமிழ் 'சீரிய, சீர்' என்பதை 'ஸிரி' உ+ம் 'ஸிரிஸேன்' எனவும் சற்று மாற்றி அதைப் புதுமொழி என்கின்றனர்.

1981.06.01 இல் நடு இரவில் யாழ். நூலகம் தீக்கிரையானது.அதிலுள்ள விலை மதிக்கமுடியாத 97,000 நூல்களும் அரச நாசகாரரால் நாசமாயின. யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மேல்மாடிக் கட்டடத்தி[illegible] மேற்குப் பக்க அறையில் வாழ்ந்துகொ[illegible]டிருந்த 74 வயதுடைய கலாநிதி தாவீது அடிகள் இதனைக் கண்ணுற்றதும், பேரதிர்ச்சியினால் உயிர் துறந்தார். யாழ்.நூலகத்தை உருவாக்கினாலும் நடமாடிய பல்கலைக்கழக தாவீது அடிகளை யாரால் உருவாக்க முடியும்? உலகம் உள்ள காலம்வரை தாவீது அடிகளின் சோகக் கதையைக் கூறும்.

எந்த ஓர் இனத்தினதும் மொழியும், கலை, கலாசாரமும் வளர்ந்தால் தான் அந்த இனம் வளரும்.மொழி வளர்ச்சிக்கும் மொழி ஆய்வுக்கும், சமயத்திற்கும் பூரணமாக தன்னை அர்ப்பணித்த தியாகச் செம்மல் கலாநிதி தாவீது அடிகள் என்றால் அது வெள்ளிடை மலையாகும். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பரின் அமுதவுரைக்கு ஏற்ப இவர் ஆசிரிய உலகிற்கு ஒரு உத்தம வழிகாட்டியாகத் திகழ்கிறார்.

மேற்குலக அறிஞர்கள் தலை வணங்கினர்."என்னை நன்றாய் இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே" என்ற திருமூல கூற்றுக்கு இலக்கணமாகத் தன் சொந்த மண்ணிலும், மேற்குலக நாடுகளிலும் தமிழ்ப்பணியாற்றிய பெருமகனார் தாவீது அடிகள். தமிழ் ஆராய்ச்சி மாநாடு வழிநடத்தலில், ஆலமரத்தின் அணிவேர் போலத் தமிழ்த்தூது தனிநாயகத்திற்கு, வலது கரமாகத் தாவீது அடிகள் திகழ்ந்து தமிழின் பெருமையும், மகிமையும், உலக அறிஞர்கள் அறிந்து தலைவனாகும் வண்ணம் தமிழ்ப்பண்பாடு (TAMIL CULTURE) என்ற ஆங்கில முத்திகள் ஏட்டில் 12 கட்டுரைகள் தாவீது அடிகள் எழுதியுள்ளார்.

சென்னை பல்கலைக்கழக முதுகலை மாணித் தேர்வு, கலாநிதி ஆகிய ஆய்வுக் கட்டுரைகளை நுட்பமாக மதிப்பிடுவதில் புகழாரம் ஈட்டினார். வெளிநாடுகளில், சிறப்பாக லண்டன் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத விரிவுரையாளராகவும், ஜேர்மனி பல்கலைக்கழகத்தில் ஜேர்மன் மொழி கற்று அங்கு பிறநாட்டார் தலைவணங்கும் முறையில் சிறப்பு விரிவுரைகள் நிகழ்த்திப் பெருமையீட்டினார் இரத்தினச் சுருக்கம் கலாநிதி தாவீது அடிகள்.



### எம் பணி

✎ கலாநிதி தாவீது அடிகளின் நினைவு தினத்தில் தேசிய வீரர்களின் பட்டியலில் அனைவரையும் சேர்ப்பதுடன் அஞ்சல் தலை மூலம் அவரைக் கௌரவிக்குமாறு ஆட்சிப் பீடத்துக்கு விண்ணப்பித்தல்.

✎ "யாழ் பொதுசன நூலகத்தில் தாவீது அடிகளின் உருவச் சிலையை நிறுவி 33 மொழிகள் தெரிந்த பன்மொழிமேதை யாழ். நூலகம் பற்றி எரிவதைக் காண சகியாது தன்னுயிர் நீத்தார்" எனபொறிக்கப்பட வேண்டும்.

துரை. ஆரோக்கியதாசன்
B.A.Sp.TRd..Dip-in-T.M..P.G.D.E
முன்னாள் பிரதி அதிபர் ,
பலாலி ஆசிரியர் கலாசாலை.

✎ யாழ். பொதுசன நூலகத்தில் 'கலாநிதி' தாவீது ஆய்வகம் என ஒரு பகுதி ஒதுக்கப்படுதல். அடிகளாரின் ஆக்கங்கள், ஏனைய தமிழ் பேரறிஞர்களின் ஆக்கங்கள் இடம் பெற வழிவகுக்க வேண்டும்.

✎ யாழ்.பல்கலைக்கழகம் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியை அறிஞர்கள் உதவியுடன் பூர்த்தி செய்தல்.

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த விசேட செயற்றிட்டம்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கென பொருளாதார அபிவிருத்தி அமைச்சு விசேட செயற்றிட்டமொன்றினை அமுல்படுத்தவுள்ளது.

எனவே மக்கள் பங்கேற்பு முறையில் அமைந்த இந்த வேலைத்திட்டத்திற்காக 86 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திட்ட இணைப்பாளர் ஏ.பி.எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

இதில் 50 மில்லியன் டொலர் உதவியினை உலகவங்கியும், 36 மில்லியன் டொலர் நிதியினை திறைசேரியும் வழங்கவுள்ளது.

மேலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி ஆணையாளர்களின் மேற்பார்வையின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் இம் மாதத்தின் இறுதிப் பகுதியில் தேவையான நிதி ஒதுக்கீடுகளை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குவதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மேலும் இதுகுறித்து சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்களுக்கு இந்த வேலைத் திட்டம் தொடர்பாக விளக்கமளிக்கும் செயலமர்வுகளை இவ் அமைச்சு மாவட்ட ரீதியாக நடாத்தி வருகின்றது. மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே திட்ட இணைப்பாளர் இந்த தகவல்களைத் தெரிவித்தார். (4)

## இலங்கையின் யுத்தக் குற்றச் செயல்கள் குறித்த விசாரணைகளை ஐ.நாவால் நடத்த முடியாது

### ஐ.நா.கண்காணிப்பகம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சரியான விசாரணைகளை நடத்த முடியாது என ஐக்கிய நாடுகள் கண்காணிப்பகம் அறிவித்துள்ளது.

விசாரணைகளை நடத்துமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் கோருவதன் மூலம் நீதியை நிலைநாட்ட முடியும் எனக் கருத முடியாது என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சிலவேளைகளில் இந்த விசாரணை முடிவுகள் நீதியின் மறுபக்கத்தையே பிரதிபலிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளை நடத்தும் பொறுப்பை கண்மூடித்தனமாக ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் ஒப்படைக்கக்கூடாது எனதெரிவித்துள்ளது.

ஜனநாயக ஆட்சி நிலவாத சீனா, கியூபா மற்றும் சவூதி அரேபியா போன்ற நாடுகளே இலங்கை மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

## நிர்க்கதியான 36 பணிப் பெண்கள் குவைத்திலிருந்து நாடு திரும்பினர்

(கொழும்பு)

பணிப்பெண்களாக வேலைவாய்ப்பு; பெற்றுச் சென்று நிர்க்கதி நிலைக்கு ஆளான 36 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் குவைத்திலிருந்து நாடு திரும்பினர்.

விசா காலாவதி காரணமாக குவைத்திலுள்ள இலங்கை தூதரகத்தில் தங்கிவைக்கப்பட்டுள்ளோரில் 36 பணிப்பெண்கள் இவ்வாறு நாடு திரும்பியதாக வெளிநாடு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்தது.

இவர்கள் நேற்று முன்தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். மேலும் சிலர் எதிர்வரும் வாரங்களில் நாடு திரும்பவுள்ளதாக பணியகம் தெரிவிக்கின்றது.

இலங்கையிலிருந்து குவைத் நாட்டுக்குப் பணிப்பெண்களாகச் சென்ற இவர்கள் பல்வேறு காரணங்களினால் மீண்டும் நாட்டுக்குத் திரும்புவதற்குத் தீர்மானித்துள்ளதுடன் குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்தில் தங்கியுள்ளனர்.

இந்நிலையில் இவர் களின் விசா காலாவதியாகியுள்ளதெனவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேற்கொண்ட நடவடிக்கை யினால் இவர்கள் கட்டம் கட்டமாக இலங்கைக்கு அழைத்து வரப்படுகின்றனரெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# கறுப்பு நிறப்படுத்தப்பட்ட கண்ணாடிகளை உடைய வாகனங்களுக்குத் தடை

## நாளை மறுதினம் முதல் அமுல்

(கொழும்பு)

வாகனங்களின் கண்ணாடிகளுக்கு கறுப்பு நிறப்படுத்துவதை நீக்குவதற்கும் முறையான வாகனப் பதிவுகளுக்கும் பொலிஸ் தலைமையகம் வழங்கிய கால அவகாசம் நாளை நள்ளிரவுடன் நிறைவடை கின்றது.

எனவே நாளை மறுதினம் முதல் இயந் திர இலக்கம் மற்றும் கறுப்பு நிறப்படுத்தப்பட்ட கண்ணாடியுடைய வாகனங்களுக்கு தடை விதிப்பதுடன் அவ்வாறான வாகனங்களை போக்குவரத்தில் ஈடுபடுத்தும் பட்சத்தில் அதற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள் ளது.

இது தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச் சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜய கொடி கூறுகையில்,

போதைப் பொருள் கடத்தல் மற்றும் ஆள் கடத்தல் உட்பட பல்வேறு பாரியளவிலான சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக கறுப்பு நிறப்படுத்திய கண்ணாடிகளுடனான வாகனங் கள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் மோட்டார் போக்குரவத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமல் இயந்திர இலக்கத்து டன் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படும் வாக னங்களும் சட்டவிரோத நடவடிக்கைகளுக் காகப் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே இலங்கையின் போக்குவரத்து சட்ட விதிகளுக்கு அமைவாக கறுப்பு நிறப் படுத்திய கண்ணாடிகள் வாகனத்தை செலுத் துபவரையும் முன்னாசனத்தில் அமர்ந்திருப் பவரையும் மறைக்குமானால் அது சட்ட விரோதமாகும்.

அதேபோன்று பின் ஆசனங்களில் அமர்ந்திருப்பவர்களும் வெளியே தென்பட வேண்டும் என்பதே உள்நாட்டின் போக்கு வரத்து சட்டவிதியாகும். (6)

# ஓமந்தையில் முதலீட்டு வலயம், தொழில்நுட்பக் கல்லூரி; நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

ஓமந்தை முதலீட்டு வலயம் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி என்பவற்றின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன.

முதற்கட்டமாக 50 மில்லியன் ரூபாவை நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கியுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம். எஸ்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இவற்றின் நிர்மாணப் பணிகளை இந்த வருட இறுதிக்குள் பூர்த்திசெய்ய எண்ணி யுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முதலீட்டு வலயம் அமைக்கப்படவுள்ள தால் வடக்கின் விவசாய விளை பொருட் களையும் பனை உற்பத்திப் பொருட்களை யும் இலகுவாகச் சந்தைப்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. (6)

# மாற்றுத் திறனாளிகளுக்கு வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

மாற்றுத் திறனாளிகளின் வாழ்கையை மேம்படுத்துவதற்கான விசேட வேலைத் திட்டத்தின் அவசியம் ஏற்பட்டுள்ளதாக சமூக சேவைகள் பிரதியமைச்சர் சந்திரசிறி சூரியா ராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஏற்கனவே சில நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண் டுள்ளதாகவும் மாற்றுத் திறனுள்ள ஒரு வருக்கு வீடொன்றை நிர்மாணிக்க ஒரு இலட்சம் ரூபாவை உதவிப் பணமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இவர்களின் சுயதொழில் முயற்சி நடவடிக்கைகளுக்காக 10 ஆயிரம் ரூபாவை வழங்கவும் திட்டமிடப்பட்டுள் ளது. (6)

# தென்னிந்திய திரைப்படங்களுக்கு இலங்கையில் தடைவிதிக்கப்படுமா?

(கொழும்பு)

தென்னிந்திய திரைப்படங்களுக்கு இலங்கையில் தடைவிதிப்பது குறித்து அர சாங்கம் ஆலோசித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு தடை விதிக்கப்படின் அது அர சாங்கத்துக்கு பாதகமானதாகவே அமையும் என்றும் , இலங்கை திரைப்பட இறக்குமதித் துறை மற்றும் திரைப்பட சங்கத்தினரின் எதிர்ப்பை அரசாங்கம் சம்பாதிக்க நேரிடும் எனவும் கருதப்படுகிறது.

தற்போது 'ஐபா' திரைப்படவிழா இலங் கையில் நடைபெறவுள்ள நிலையில், அதில் கலந்துகொள்ளப் போவதில்லை என தென் னிந்திய திரைப்பட சங்கத்தினர் தெரிவித்துள் ளனர். அத்துடன் வட இந்தியத் திரைப்பட துறையினரையும் இதில் கலந்துகொள்ள வேண்டாம் என பல்வேறு தரப்பில் இருந்தும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், பொலிவூட்டின் பிரபல நடிகர்கள் பலர் இந்த விழாவில் கலந்து கொள்ளப்போவதில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் அடிப்படையில், ஒருவேளை இந்தத் திரைப்பட விருது வழங் கும் விழா இடை நிறுத்தப்பட்டாலோ அல்லது இடம்மாற்றப்பட்டாலோ அல்லது அதில் முக்கிய பிரபலங்கள் கலந்துகொள்ளாமல் விட்டாலோ இலங்கை அரசாங்கம் அதிருப் திக்கு உள்ளாகும்.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு, தென்னிந்திய திரைப்படங்களை, குறிப்பாக தமிழ்த் திரைப்படங்களை இலங்கையில் திரையிடுவதற்கு தடையேற்படுத்தலாம் அல் லது புதிய கட்டுப்பாடுகளை விதிக்கலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எவ்வாறாயினும், தென்னிந்தியத் திரைப் படங்கள் இலங்கையில் வருமான ரீதியாக முக்கிய இடத்தை வகிக்கின்றன. எனவே இதற்கு கட்டுப்பாடுகள் அல்லது தடை ஏற்படுத் தப்படும் பட்சத்தில், அது அரசாங்கத்துக்கு பாதகமானதாகவே அமையும்.

அத்துடன் இந்தியாவின் குறிப்பாக தமிழக அரசுடனான உறவிலும் அது பாதிப் பைக் கொண்டு வரும். இலங்கை திரைப்பட இறக்குமதித்துறை மற்றும் திரைப்பட சங்கத்தி னரின் எதிர்ப்பையும் அரசாங்கம் சம்பாதிக்க நேரிடும் எனக் கருதப்படுகிறது.

இவ்வாறு தடை ஏற்படுத்தப்படும் பட்சத் தில், சர்வதேச ரீதியாக இலங்கை அரசாங் கத்தின் மீது அவப்பெயர் சுமத்தப்படும் எனக் கூறப்படுகிறது. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு, அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை மேற்கொள்ளாது தவிர்க்கலாம் எனவும் கருத்துக்கள் எழுந்துள்ளன.

இதேவேளை, தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப்பட்டுள்ள திரையரங்குகளை தாக்கு வதற்கு சிலர் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கையில் தமிழ்த் திரைப்படங்களை வெளியிடும் திரையரங்கு களின் உரிமையாளர்களாக பெரும்பாலும் பெரும்பான்மை இனத்தவர்களே காணப்படு கின்றனர்.

இதுதொடர்பில் அவர்கள் திரைப்பட இறக் குமதி மற்றும் சந்தைப்படுத்தல் துறையின ருக்கு முறையிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதற்கிடையில், எவ்வாறெனினும் இந்த விழாவில் ஹிந்தி உலக நட்சத்திரங்களை பங்குபற்ற செய்துவிட வேண்டும் என ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது.

இதன் அடிப்படையில் அண்மையில் ரைம்ஸ் ஒவ் இந்திய இணையத்தளத்துக்கு அவர் வழங்கிய செவ்வியில், தாம் ஹிந்திப் படங்களை நாளாந்தம் பார்த்து இரசிப்பதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# பட்டம் விட்ட மாணவன் நீர்த்தேக்கத்தில் விழுந்து மரணம்

(கொழும்பு)

பட்டம் விட்டு விளையாடிய 15வயது கிரோஸ் உதாரவே மாணவன் நேற்று முன் தினம் உடவளவை நீர்த்தேக்கத்தில் கால் தவறி விழுந்து பலியாகியுள்ளார்.

கால் தவறி விழுந்த நண்பனை சிறான் காலிந்த என்ற மாணவன் காப்பாற்றவென நீரில் குதித்துள்ளான்.

அச்சமயம் இருவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன் சிறான்காலிந்த நீரில் அடித்துச் செல்லப்பட்டு மீனவர்களால் உயிருடன் காப்பாற்றப்பட்டுள்ளதுடன் அம் மாணவன் உடவளவை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (6)

# பௌத்த மதத்தை பாதுகாப்பதற்கு 5 புதிய சட்டங்களை அமுலாக்க தீர்மானம்

## பிரதமர் தெரிவிப்பு



ஐந்து புதிய சட்ட ங்களை அறிமுகப் படுத்துவதற்கு தீர் மானித்துள்ளதா கவும் அதன் மூலம் பௌத்த மத்ததையும் மகா சங்கத் தையும் பாது காப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பிரதமர் டி. எம். ஜயரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவையின் கடந்த முறை கூட் டத்தில் இது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளதா கவும் அவர் கூறினார்.

பௌத்தம் தொடர்பான விடயங்களில் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்க முன்னணி பௌத்த பிக்குகள் அடங்கிய சங்க சபையொன்றை அமைப்பது தொடர்பாகவும் பிரேரணையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பலவந்த மத மாற்றத்தை தடுத் தல் மற்றும் பௌத்தம் தொடர்பான புதிய நடைமுறைகள் பற்றி சமய வட்டாரங்களி டையிலான கலந்துரையாடல் நடத்துவது பற்றியும் பிரேரணைகள் முன்வைக்கப்பட வுள்ளன.

மேற்படி சட்டப் பிரேரணைகளுடன் கிரா மப்புற விகாரைகளின் உட்கட்டமைப்பு மற்றும் தேவைகளுக்கு நிதி வழங்குதல், விகாரை களுக்கு சொந்தமான காணிகளை அரசாங் கத்துக்கு குத்தகைக்கு வழங்குதல் ஆகிய வையும் இடம்பெறுவதாக பிரதமர் டி.எம். ஜயரத்ன மேலும் தெரிவித்தார். (6)

# கண்டியில் இந்திய விசா அலுவலகம் திறந்து வைப்பு

இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் விசா விண்ணப்ப நிலையமொன்று கண்டியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ் தானிகர் அசோக்குமார் காந்தவினால் கண்டி பேராதனை பிரதான வீதியில் இந்த விசா விண்ணப்ப நிலையம் நேற்றுக் காலை உத்தியோக பூர்வமாகத் திறந்துவைக்கப் பட்டது.

கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங் களுக்கு அடுத்தபடியாக இலங்கைக்கான மூன்றாவது இந்திய விசா விண்ணப்ப நிலையமாக இது அமையவுள்ளது.

இந்த நிலையத்தினூடாக இந்தியா வுக்கான விசா விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் விசா விநியோக நடவடிக்கைகள் மாத்திரமே முன்னெடுக்கப் படவுள்ளன. (6)

# '1948' இலக்க தொலைபேசியூடாக இலவச சுகாதார ஆலோசனை

(கொழும்பு)

புகையிலைப் பாவனை மற்றும் புகை பிடித்தல் பழக்கவழக்கங்களிலிருந்து தவிர்த் துக் கொள்வதற்காக தொலைபேசி ஊடாக இலவச ஆலோசனை வழங்கும் சேவை யொன்று நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

உலக புகையிலை பாவனை எதிர்ப்பு தினத்தின் நிமித்தம் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனாவின் ஆலோசனை க்கு அமைய அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இச் சேவைக்கு நாடு சுதந்திரமடைந்த வருட மான 1948 ஆம் ஆண்டே இலக்கமாக வழங்கப்பட்டுள்ளது.

1948 என்ற தொலைபேசி இலக்கத் துடன் தொடர்புகொள்வதன் மூலம் புகை யிலை பாவனை புகைபிடித்தல் பழக்க வழக்கம் என்பவற்றைத் தவிர்த்துக் கொள் வதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

# தொலைத்தொடர்பாடல்துறையில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது

## தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

(கொழும்பு)

தொலைத் தொடர்பாடல் துறையில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் தொலைத் தொடர்பாடல் வசதிகளை பெறுவோரின் எண்ணிக்கை 85 சதவீதம் வரை உயர்ந்துள்ளது எனவும் நிலையான தொலைபேசிகளை பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை விட கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனவும் குறிப்பிடப்படுகிறது.

நாடு முழுவதும் ஒரு கோடியே 74 இலட்சம் பேர் நிலையான தொலை பேசியினை பயன்படுத்துகின்றனர்.

கடந்த வருடத்தில் கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்துவோரின் எண்ணிகை ஒரு கோடியே 34 இலட்சத்திலிருந்து 2 கோடியே 39 இலட்சமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# குளிக்கச் சென்றவேளை வலிப்பு ஏற்பட்டு தொட்டிக்குள் மூழ்கிய இளைஞர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீட்டுக் கிணற்றில் குளிக்கச் சென்ற சமயம் திடீரென வலிப்பு ஏற்பட்டு அருகில் இருந்த தண்ணீர் தொட்டிக்குள் மூழ்கிய நிலையில் இளைஞரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் நாயன்மார் கட்டுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நாயன்மார் கட்டு வெயிலுகந்த பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் சிவ செல்வன் (வயது 24) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

கோவிலில் சாத்துப்படி வேலைகள் செய்து வரும் பிரஸ்தாப நபர் வழக்கம் போல தமது பணிகளை முடித்துவிட்டு குளிக்கச் சென்ற சமயம் இச்சம்பவம் நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-3)

# மாணவர் குழுக்களுக்கிடையிலான மோதலை அடுத்து மொரட்டுவப்பல்கலைக்கழகம் மூடல்

(கொழுமபு)

மொரட்டுதவ பல்கலைக்கழகத்தில் இரு மாணவர் குழுக்களுக்கு இடையில் இடம் பெற்ற மோதலை அடுத்து அந்தப் பல்கலைக் கழகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற மேற்படி மோதலில் 3 மாணவர்கள் காயமடைந்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டது.

வெசாக் தினத்தை முன்னிட்டு குறித்த பல்கலைக்கழக மாணவர்கள் கண்காட்சியொன்றை ஏற்பாடு செய்திருந்தாகவும் இதன் போதே மேற்படி மோதல் இடம் பெற்ற தாகவும் அந்தப் பிரிவு குறிப்பிட்டது.

பல்கலைக்கழக வளாகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக கூறிய பொலிஸ் ஊடகப் பிரிவு, எனினும் தற்போது அங்கு சுமூகமான நிலைமை காணப்படுவதாக வும் தெரிவித்தது. (4-6)

# மலேசியாவில் இலங்கை அகதிகள் 7ஆவது நாளாக உண்ணாவிரதம்

(கொழும்பு)

மலேசியாவில் உணவுத்தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள இலங்கை அகதிகள் தொடர்ந்து 7ஆவது நாளாக நேற்றும் தமது போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

மலேசியா தலைநகர் கோலாலம்பூரிலுள்ள முகாமொன்றில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டனர்.

மனிதாபிமானம் மிக்க நாடு ஒன்று தம்மை குடியேற்றி பொறுப்பேற்க வேண்டும் என கோரி அவர்கள் இந்த போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

61அகதிகள் இதில் கலந்துகொண்டுள்ள போதும் அவர்களுடன் சென்ற 6 சிறுவர்கள் மற்றும் 8 பெண்கள் குறித்த தகவல்கள் தமக்கு தெரியவில்லையென அகதிகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 15 பேர் மயக்கநிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# 108 அஷ்டோத்திர சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை உடுக்கியளை ஸ்ரீ மஹா கணபதிப் பிள்ளையார் திருக்கோவிலின் வருடாந்த 108 அஷ்டோத்திர ஸதசங்காபி ஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இக் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை மாலை வாஸ்து சாந்தி, கும்பஸ்தானம், யாகபூசை, ஹோமம் என்பன இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு விசேட திரவியாபிஷேகம், பூர்ணாகுதி, மூலவர் பஞ்சமுக விநாயகருக்கு சங்காபிஷேகமும் விசேட பூசையும் நடைபெற்று சுவாமி திருவீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (4)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சைகள் -2009

1. வணிக முதற் தேர்வு - 2009 (புதிய பாடத்திட்டம்)
2. வணிக மூன்றாம் தேர்வு - 2008 (புதிய பாடத்திட்டம்)
3. வணிக முதற்தேர்வு - 2009 (பழைய பாடத்திட்டம்)
4. வணிகமாணி பகுதி -I - 2008 & 2009 (பழைய பாடத்திட்டம்)
5. வணிகமாணி பகுதி - II - 2008 (பழைய பாடத்திட்டம்)
6. வணிகமாணி பகுதி -III - 2007 & 2008 (பழைய பாடத்திட்டம்)

மேற்படி பரீட்சைகளை 21.06.2010 (திங்கட்கிழமை) தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் பின்வரும் ஒழுங்கில் நடாத்து வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| வணிக முதற் தேர்வு -2009 (பழைய பாடத்திட்டம்) | 21.06.2010-30.06.2010 | 9.00-12.00 |
| வணிகமாணி பகுதி -II -2008 (பழைய பாடத்திட்டம்) | 21.06.2010-28.06.2010 | 1.00-4.00 |
| வணிகமாணி பகுதி -I - 2008 & 2009 (பழைய பாடத்திட்டம்) | 29.06.2010-06.07.2010 | 1.00-4.00 |
| வணிகமாணி பகுதி - III -2007 & 2008 (பழைய பாடத்திட்டம்) | 01.07.2010-07.07.2010 | 9.00-12.00 |
| வணிக முதற் தேர்வு - 2009 (புதிய பாடத்திட்டம்) | 02.08.2010-10.08.2010 | 9.00-12.00 |
| வணிக மூன்றாம் தேர்வு -2009 (புதிய பாடத்திட்டம்) | 02.08.2010-07.08.2010 | 1.00-4.00 |

பழைய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 16.06.2010 (புதன்கிழமை) தொடக்கமும், புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையிலான பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 28.07.2010 (புதன்கிழமை) தொடக்கமும் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்**
**31.05.2010**

(சி/357)


# தனுன திலகரட்னவை நீதிமன்றில் ஆஜராகுமாறு துண்டுப்பிரசுரம்

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகன் தனுன திலகரட்னவை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கோரி துண்டுப்பிர சுரங்களை ஒட்டுமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் கொழும்புக்கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இது தொடர்பிலான துண்டுபிரசுரங்களை நீதிமன்ற வளாகம்,பொதுஇடங்கள் மற்றும் அவரது வீட்டிற்கு அருகில் ஒட்டுமாறும் கொழும்புக்கோட்டை நீதவான் நீதிமன்றம் குறிப்பிட்டது.

தனுன திலகரட்னவை சரணடையுமாறு 30 நாள் கால அவகாசம் ஏற்கனவே நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

ஜெனரல் சரத்பொன்சேகாவுடன் இணைந்து தனுன திலகரட்ன நிதிக்கொள்வனவில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவரை கைது செய்யுமாறு கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி கொழும்பு நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# கரப்பந்தாட்ட பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்படும் கரப்பந்தாட்ட பயிற்சி முகாம் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன் கிழமையும் காலை 8.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் கே.ஏகாம்பரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பொதுநிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் டிலான் பெரேரா பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (4)

# அமெ. கண்டத்தில் 3 நாடுகளை புயல் தாக்கியதில் 73 பேர் பலி



(கௌதமாலாசிட்டி)

அமெரிக்க கண்டத்தில் பசுபிக் கடல் பிராந்தியத்தில் உள்ள கௌதமலா நாட்டில் மெக்சிகோ எல்லையில் புயல் தாக்கியது. இதற்கு அகதா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

புயல் காரணமாக கௌதமாலாவில் கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிக கடுமையாக மழை பெய்தது. இதனால் சுமார் 3 அடி உயரத்துக்கு வீதிகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

தலைநகர் கௌதமாலா சிட்டி அருகேயுள்ள சான் அண்டோனியோ பலோபோ நகரில் கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் வீடுகள் மண்ணுக்குள் புதைந்தன. மரங்கள், மின்கம்பங்கள், வீதிகள் போன்றவையும் மண்ணுக்குள் மறைந்தன.

கோப்பி தோட்டங்கள் பூமிக்குள் புதைந்து நாசமானது. மேலும் ஸ்வல்லன் ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக கரை உடைந்தது. இதையடுத்து வெள்ளம் கிராமங்களில் புகுந்தது.

நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி 63 பேர் உயிரிழந்தனர். 70 ஆயிரம் பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். மீட்பு நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெறுகிறது என கௌதமாலா அதிபர் அல்லாரோ கோலாம் தெரிவித்துள்ளார்.

கௌதமாலாவை தாக்கிய அகதா புயல் பக்கத்து நாடுகளான எல்சால்வேடர், ஹோண்டுரா ஆகிய நாடுகளையும் தாக்கியது. பலத்த மழை பெய்ததால் அங்கும் வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவு ஏற்பட்டது.

எல்சால்வோடரில் 140 இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் 9 பேர் பலியானார்கள். இந்த தகவலை அந்நாட்டு அதிபர் மாருரிசியோபியூன்ஸ் தெரிவித்தார். ஹோண்டுராவில் ஏற்பட்ட புயல் மழைக்கு சாந்தா அனா நகரில் வீட்டு சுவர் இடிந்து விழுந்தது. அதில் சிக்கி ஒருவர் இறந்தார். இந்த 3 நாடுகளிலும் புயல் தாக்குதலில் 73 பேர் உயிரிழுந்துள்ளனர். (6)

## இங்கிலாந்து நிதியமைச்சர் டேவிட் லாஸ் இராஜினாமா

(லண்டன்)



இங்கிலாந்து நாட்டில் சமீபத்தில்தான் கன்சர்வேடிவ், லிபரல் ஜனநாயகக் கட்சி கூட்டணி ஆட்சிக்கு வந்தது. பதவி ஏற்ற சில நாட்களிலேயே லிபரல் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த நிதியமைச்சர் ஊழலில் சிக்கிக் கொண்டார். இதனால் அவர் தன் பதவியை இராஜினாமா செய்தார்.

செலவினங்களை குறைப்பதற்கான நிதியமைச்சரான டேவிட் லாஸ், மக்களின் வரிப்பணம் 28 இலட்சம் ரூபாவை எடுத்து செலவிட்டது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து அவர் பதவியை இராஜினாமா செய்தார்.

17 நாட்கள் மட்டுமே மந்திரியாக இருந்த இவருக்கு பதிலாக அதே கட்சியை சேர்ந்த டானி அலெக்சாண்டர் புதிய நிதியமைச்சராக பதவி ஏற்றார். (6)

## சீனாவில் பள்ளிக் குழந்தைகளை கத்தியால் குத்தியவருக்கு மரணதண்டனை நிறைவேற்றம்

(பீஜிங்)

சீனாவில் பள்ளிக்குழந்தைகள் மற்றும் ஆசிரியர்கள் கத்தியால் குத்திய ஜு யுயுவான் (47) என்பவருக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனை கடந்த ஞாயிற்றுக்கிழமை நிறைவேற்றப்பட்டது.

கடந்த மாதம் சீனாவின் ஜியாங்குஸ் மாகாணத்தில் உள்ள பள்ளி ஒன்றுக்குள் திடீரென நுழைந்த யுயுவான் பள்ளிக்குழந்தைகள், ஆசிரியர்கள் ஆகியோரை கத்தியால் குத்திவிட்டு தப்பினார். இந்தச் சம்பவத்தில் 29 குழந்தைகளும் 3 ஆசிரியர்களும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கத்தியால் குத்திவிட்டு தப்பிய யுயுவானை பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் விசாரித்ததில் அவர் கடந்த 9 ஆண்டுகளாக வேலையில்லாமல் இருந்ததும் இதனால் விரக்தி அடைந்து இது போன்ற செயலில் ஈடுபட்டதும் தெரிய வந்தது.

எனினும் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த கீழ் நிலை நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்தது. இத்தண்டனையை அந்நாட்டு உச்சநீதிமன்றம் உறுதி செய்தது இதைத் தொடர்ந்து யுயுவானின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. சீனாவில் கடந்த ஏப்ரலில் இருந்து குழந்தைகளை கத்தியால் குத்தியதற்காக மரண தண்டனை நிறை வேற்றப்பட்ட 2 ஆவது நபர் யுயுவான். முன்னதாக மருத்துவர் ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. (4)

## ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை அறிந்திருப்பதனால் மூளைக்கு நன்மை

### ஆய்வில் தகவல்

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை அறிந்திருப்பது மூளைக்கு நன்மையை ஏற்படுத்தும் என பான்குர் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு வயது முதல் 80 வயது வரையிலான 700 நபர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்தத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பல மொழிகளில் பேசுவதற்கும் பல கலாசாரங்களை அறிந்து கொள்வதற்கும் மொழியறிவு மிகவும் இன்றியமையாததென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறு பல மொழிகளை தெரிந்து கொள்வதனால் நேரடியாக கிடைக்கப் பெறக் கூடிய நன்மைகளைப் போன்றே மறைமுகமாக உடலுக்கு வேறு நன்மைகள் கிடைக்கப் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம்மூளைவயதடைவதனைகட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இரண்டு மொழிகளில் பேசுதல் , எழுதுதல் மற்றும் சிந்தித்தல் ஆகியவற்றினால் மூளையின் செயற்திறன் வலுப்



பெறுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

மொழிச் செயற்பாடுகள் மூளையின் சிக்கல் மிகுந்த இயக்கங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்ற அதேவேளை இரண்டு வேறுபட்ட மொழிக் கட்டமைப்புக்களை மூளை ஆயுள் முழுவதும் செயற்படுத்துவதனால் பல்வேறு நன்மைகள் கிடைப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (6)

## கொலம்பியா நாட்டில் ஜனாதிபதி தேர்தல் ஆரம்பம்

கொலம்பிய ஜனாதிபதி தேர்தல் நேற்று முன்தினம் ஆரம்பமானது. இத்தேர்தல் மூலம் இரு தடவைகள் ஜனாதிபதியாக பதவி வகித்த அல்வாரோ உரிபே பதவி விலகுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் அல்வாரோ உரிபேயின் ஆதரவாளரான முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜுவான் மானுவேல் சந்தோஸுக்கு முன்னாள் பொகோடா மேயர் அன்டானஸ் மொக்கஸ் கடும் சவாலாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இது தொடர்பான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புகளில் ஜுவான் மானுவேல் சந்தோஸ் முன்னணியிலுள்ள போதும் வெற்றி பெறுவதற்கு தேவையான வாக்குகளைப் பெறுவது சாத்தியமில்லை என்றே கரு தப்படுகிறது.

இரு பிரதான வேட்பாளர்களுக்குமிடையிலான இரண்டாம் சுற்று வாக்கெடுப்பு இம் மாதம் 20 ஆம் திகதி நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத் தேர்தலில் பழமைவாத கட்சியைச் சேர்ந்த நொயேமி சனின் போலோ டெமோகிரரிகோ கட்சியைச் சேர்ந்த கஸ்டவோ பெட்ரோ , ரேடிகல் சேஞ்ச் கட்சியைச் சேர்ந்த ஜேர்மன் வர்கஸ் லியரஸ் மற்றும் லிபரல் கட்சியைச் சேர்ந்த ராபெயல் பர்டோ ஆகியோரும் போட்டியிடுகின்றனர். (6)

## தாய்லாந்தில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது

தாய்லாந்தில் கடந்தசில நாட்களாக அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் தற்போது நீக்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் அமைதியான சூழ் நிலை காணப்படுவதாகவும், இதனால், ஊரடங்குச் சட்டத்தை தளர்த்துவதாகவும் தாய்லாந்துப் பிரதமர் அபிஸிட் விஜ்ஜீவா அறிவித்துள்ளார்.

தாய்லாந்தில் செஞ்சட்டை ஆர்பாட்டக்காரர்களுக்கும் தாய்லாந்து இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதை அடுத்து,தாய்லாந்து தலைநகர் பாங்கொக் மற்றும் ஏனைய 23 மாகாணங்களிலும் கடந்த 19 ஆம் திகதி முதல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

மேற்படி மோதலில் இதுவரையில் சுமார் 50 பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கும் அதேவேளை, 400 பேர் காயமடைந்துள்ளனர். தாய்லாந்தில் தற்போது பதவி வகிக்கும் அரசாங்கத்தை பதவியிலிருந்து விலகுமாறும், புதிதாக தேர்தலொன்றை நடத்துமாறும் கோரி செஞ் சட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் கடந்த மார்ச் மாதம் 14 ஆம்திகதி முதல் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

எனினும், தனது பதவியை இராஜினாமாச் செய்யப்போவதில்லை என தாய்லாந்துப் பிரதமர் அபிஸிட் விஜ்ஜீவா முன்னர் அறிவித்திருந்தார்.

இதற்கிடையில்,தாய்லாந்தில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களைத் தவிர்த்து உடனடியாக பேச்சுவார்த்தையொன்றில் ஈடுபடுமாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் அதிகாரிகளிடமும், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீமூன் கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும், இதனை தாய்லாந்து அதிகாரிகள் நிராகரித்திருந்தனர். இது இவ்வாறிருக்க, தாய்லாந்தில் செஞ்சட்டை ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இராணுவத் தினருக்கும் இடையில் இடம்பெற்றுவரும் மோதலை முடிவுக்குக்கொண்டுவருமாறும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)




## பாகிஸ்தானில் பயங்கரவாதிகளின் தாக்குதலில் 3 பொலிஸார் பலி

(லாகூர்)

பாகிஸ்தானில் பொலிஸ் சாவடியில் இருந்தவர்கள் மீது பயங்கரவாதிகள் துப் பாக்கியால் சுட்டதில் 3 பேர் பலியானார்கள்.

லாகூரில் சமானாபாத் என்ற பகுதியில் பொலிஸ் சாவடியில் இருந்தவர்கள் மீது சனிக்கிழமை நள்ளிரவு மோட்டார் சைக்கிளில் வந்த பயங்கரவாதிகள் துப்பாக்கியால் சரமாரியாக சுட்டனர்.

இதில் ஒரு எஸ்.ஐ ,2 கான்டபிள்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். லாகூர் நகரில் இதேபோன்று அண்மையில் 3 தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன என பொலிஸ் அதிகாரி செத்ரி ஷபிக் அகமது தெரிவித்தார்.

லாகூரில் அகமதி பிரிவு முஸ்லிம்களின் 2 மசூதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை புகுந்த பயங்கரவாதிகள் 95 பேரை சுட்டுக் கொன் றனர். இந்தத் தாக்குதலில் 100 க்கும் மேற் பட்டோர் காயமடைந்தனர்.

அதற்கு அடுத்த நாளே மீண்டும் பயங்கரவாதிகள் லாகூரில் தாக்குதல் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (4)

நோயைத் தொடக்கத்திலேயே குணப்படுத்துங்கள். கடனை சிறிதாக இருக்கும் போதே செலுத்தி விடுங்கள். ~ கதே

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இந்து மதத்தை அழிக்கும் சதித்திட்டம் அரங்கேறுவதை முறியடிக்க வேண்டும்

இந்து மதத்தின் விளைநிலம் இந்தியா. அங்கு ஞானிகளுக்கும், யோகிகளுக்கும் பஞ்சமில்லை. விஞ்ஞானத்தை உள்ளடக்கிய மெஞ்ஞானக் கருத்துக்களின் களஞ்சியமாக விளங்கும் இந்து மதம் 'இந்து தர்மம்' என்ற அறக் கருத்துக்களால் உலகம் முழுவதையும் ஈர்க்கின்றது.

விஞ்ஞானத்தின் விந்தைகள் வியாபித்திருக்கும் இவ்வேளையிலும், ஆன்மீகக் கங்கையில் நீராட உலக மாந்தர்கள் முண்டியடிப்பதன் உட்பொருள் இந்துமதம் மனிதனை தெய்வமாக்கும் சக்தி பொருந்தியதென்பதற்குச் சான்றாதாரமாகும்.

எல்லா மதங்களும் இறைவழிபாடு பற்றிப் போதிக்கின்றன. ஆனால் இந்து மதம் மட்டுமே மனிதன் தெய்வமாகலாம் என்ற தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

சாயுச்சியம் என்ற மோட்சத்தின் பதவி ஒருவருக்கு கிடைக்குமாயின் அதன் பொருள் இறைவனாகவே மாறுவதாகும்.

எனவே இறைவன் தன்னையே மனிதனுக்குக் கொடுக்கும் உயர் தத்துவத்தைப் போதிக்கும் இந்துமதம் தந்த ஞானிகள் இந்திய மண்ணில் நடமாடுகின்றனர்.

ஹிமாலயாவில் தவயோகத்தில் இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான யோகிகளின் அற்புதங்களை நேரில் கண்டு பேரின்பம் பெற முடியும்.

இதற்கு அப்பால் பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா, அம்மா பகவான், ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமிகள் போன்றவர்களின் ஞானப் பார்வைக்கு ஐரோப்பிய மக்கள் ஈர்ப்புண்டு இந்திய தேசத்துக்கு வந்து வாரி வழங்கி ஆச்சிரமங்களில் ஞான நிலைக்காக தவமிருக்கின்றனர்.

இந்நிலை கண்டு குழம்பிப்போன ஐரோப்பிய நாடுகள், இந்து மதத்தைத் தூற்றி அதன் மகிமையை குழப்பத் திட்டமிட்டன.

இதற்காக மதமாற்ற அமைப்புகளை உருவாக்கி அவற்றுக்கு நிதி கொடுத்து இந்து மதத்தவர்களை மதம் மாற்றும் சதித்திட்டதை முடுக்கி விட்டுள்ளது.

இந் நடவடிக்கையும் ஐரோப்பிய நாடுகளுக்கு திருப்தி தராததமையால்,

இந்து மதத் துறவிகளுக்கும் களங்கம் விளைவிக்கும் புதிய திட்டத்தை தீட்ட அதற்கு தமிழகத்தின் நாஸ்திக பிரகிருதிகள் ராகம் இசைக்கின்றனர்.

இதன் ஒரு கட்டமே சுவாமி நித்தியானந்த பரமஹம்சர் தொடர்பான விடயத்தை ஏக பத்தினி விரதரான? கருணாநிதியின் ஆட்சி காட்சிப் படுத்தி குய்யோ முறையோ என்று கதறுகிறது.

நித்தியானந்தரைத் தொடர்ந்து அம்மா பகவான் மீது களங்கம். திட்டமிட்டுத் தயாரித்த புகைப்படங்கள் மூலம் ஐரோப்பிய சதிக்கு இடம்கொடுக்கப்படுகிறது. இப்போது ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரை சுட்டுக் கொல்ல முயற்சி. இன்னும் எத்தனையோ நடக்கப்போகின்றது.

மத்தியில் சீக்கியம்; மாநிலத்தில் நாஸ்திகம். என்ன செய்ய முடியும்?

## மண்டான் கிராம அபிவிருத்தி குறித்து ஆராய அமைச்சர் டக்ளஸ் நேற்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கரணவாய் மேற்கு மண்டான் கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் பொருட்டு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு விஜயம் செய்தார்.

பழைய நெசவாலை அமைந்துள்ள கட்டடத்தில் கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் க.கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற மேற்படி சந்திப்பில் கரவெட்டி பிரதேச செயலர் சத்தியசீலனும் பங்கு கொண்டார். முன்னர் அரச குடியேற்றத் திட்டமாக விளங்கிய மண்டான் கிராமமானது தற்சமயம் மிகவும் பின்தங்கியுள்ள நிலையில் காணப்படுவதுடன் கிராமத்தின் மேம்பாட்டிற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உதவவேண்டும் என கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் தமது உரையில் தெரிவித்தார்.

இவ்விடையம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்னர் நெசவாலையாகச் செயற்பட்ட மண்டபத்தை புனரமைத்து அதனை மீண்டும் நெசவாலையாக அல்லது உள்ளூர் உற்பத்தி முயற்சி ஒன்றிற்கு பயன்படுத்த முடியும் எனத் தெரிவித்ததுடன் இது தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கும் படியும் பிரதேச செயலரைக் கேட்டுக்கொண்டார். அத்துடன் சந்தை வசதி உட்பட கிராம மக்களின் ஏனைய தேவைகளையும் கண்டறிந்து அதனை கட்டம் கட்டமாக நிறைவேற்றி வைப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

(ச)

## எங்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுங்கள்

### மகசீன் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை

யுத்தத்தின் இறுதி நாட்களில் வன்னியில் சரணடைந்த இயக்க உறுப்பினர்கள் விடுதலை செய்யப்படுவது போல் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தங்களையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் மகசீன் சிறைச்சாலை தமிழ் அரசியல் கைதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று மகசீன் சிறைச் சாலைக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியூடாக இரா.சம்பந்தனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இரா.சம்பந்தனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கைதாகிப் பல வருடங்களாக ஸ்ரீலங்காச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளின் வேதனையையும் விருப்பத்தையும் தாங்கள் நன்கு அறிவீர்கள்.

எங்களில் பலர் சட்டநடவடிக்கை ஏதுவுமின்றியும் ஏனையோர் பலதரப்பட்ட சட்டநடவடிக்கைக்கு உள்ளான நிலையிலும் உள்ளோம். இது தொடர்பான விபரமடங்கிய பட்டியலை தனியாக இணைத்துள்ளோம். கொழும்பு புதிய மகசீன் சிறைச்சாலையிலிருக்கும் நாம் பல்வேறு சிறைகளிலுமிருக்கும் அரசியல் கைதிகள் அனைவரின் சார்பாகவும் இம் மடலை கையளிக்கின்றோம்.

யுத்தம் முடிபுக்கு வந்து ஓராண்டு கடந்துவிட்டது. தனது நிலையை பலவழிகளில் அரசுக்கும் அரசுத் தலைவருக்கும் எடுத்தியம்பினோம். உருக்கமான கடிதங்கள் அனுப்பினோம். உண்ணாவிரதங்கள் இருந்து எமது உணர்வை வெளிப்படுத்தினோம். அதிகார பீடத்தின் அங்கீகாரத்துடன் அரசுப் பிரதி நிதிகள் நேரில் வந்து வாக்குறுதி தந்து எம்மைச் சமாதானப் படுத்தினார்கள். ஆனால் எமது நம்பிக்கை பொய்த்துப் போனது.

எமது குடும்ப உறவினர்களுடன் மீள்இணையத் துடிக்கின்றோம். புதிய எண்ணங்களுடன் வாழ விரும்புகின்றோம் எமக்கு விடுதலை கிடைக்கும் அந்த நாளுக்காக ஏங்குகின்றோம். சம்மந்தப்பட்டவர்களால் எமது உணர்வின் உருக்கம் ஏன் புரிந்து கொள்ளப்படவில்லை. எமது எதிர்காலம் என்ன?

யுத்தத்தின் இறுதி நாட்களின் வன்னியில் சரணடைந்த இயக்க உறுப்பினர்கள் படிப்படியாக விடுதலை செய்யப்படுவது பாராட்டுக்குரியது. அதேபோன்று எம்மீதும் அரசின் பார்வை திரும்புமா அல்லது மறுவாழ்வு என்பது எமக்கு மறுக்கப்படுகின்றதா?

தமிழ்த் தேசியத்தின் பிரதிநிதியாக திகழும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் தங்களின் மேலான கவனத்திற்கு எமது விவகாரத்தை கொண்டு வருகின்றோம். எமது விரைவான விடுதலைக்கு அரசுடனோ அரசு தலைவருடனோ நேரடியாகப் பேசி நல்லதொரு செய்தியை எமக்கு பெற்றுத் தருவீர்கள் என நம்புகின்றோம் என்றுள்ளது. (ச-7)

## 20- இருபது கிரிக்கெட் சுற்றுப்போட்டி

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டுவிழாவை முன்னிட்டு வடமராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெறும் 20- இருபது கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புற்றளை இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொலிகண்டி உதயதாரகை விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

நாளை மறுதினம் அல்வாய் கலைமகள் விளையாட்டு கழகத்தை எதிர்த்து அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (6-24)

## மீள்குடியமர்வுக்கு அழைத்துவரப்பட்டு கிளி.மத்திய கல்லூரியில் தங்கவைப்பு

### மக்கள் விசனம் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுப் பகுதிக்கு அருகில் உள்ள சாந்தபுரம் என்ற குடியேற்ற கிராமத்தைச் சேர்ந்த மக்கள் தொடர்ந்து கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. இந்த மக்கள் கடந்த ஒரு மாத காலமாக குறித்த பாடசாலையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கின்றனர்.

இரண்டு நாட்களில் தம்மை தமது சொந்த இடங்களுக்கு அனுப்பப்படும் என்று அழைத்துவரப்பட்ட நிலையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் வகுப்பறைகளில் கடந்த ஒருமாத காலமாக தாம் தங்கவைக்கப்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். சாந்தபுரத்தை கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மாற்றுவதற்காகவே மக்கள் மீள்குடியேற்றம் தடைப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத் தகவல்கள் மூலம் தெரியவருகின்றன.

(ச-5)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### வீர இளைஞருக்கு



நமது நாட்டிற்கு இப்போது வேண்டியது இரும்பை ஒத்த தசைகளும் எஃகைப்போன்ற நரம்புகளுமே. எதனாலும் தடைப்படாத, உலகின் விந்தைகளையும் மறைபொருள்களையும் ஊடுருவிப் பார்க்கவல்ல கடலின் அடியாழம் வரை செல்ல நேரிட்டாலும் கருதியதை முடிப்பதற்கான ஆற்றல் பெற்ற ஆன்மீக பலம் கொண்ட மனங்களே இப்போதைய தேவை.

இலட்சியம் உடையவன் ஆயிரம் தவறுகள் செய்தால் அது இல்லாதவன் ஐயாயிரம் தவறுகள் செய்வான் என்பது உறுதி. ஆதலால் இலட்சியம் மிகவும் தேவை.

ஆம்! உங்கள் இயல்பை மட்டும் உணர்ந்துவிட்டால் நீங்கள் தெய்வங்களே. உங்களை இழிவுபடுத்துவதாக எப்போதாவது எனக்குத் தோன்றுமானால் அது உங்களை மனிதர் என்னும் போதுதான்.

# காது வலியினாலும் மயக்கம் வருமா?

காது நோய்கள் என்றால் அந்த விடயத்தை நாம், நம் காதுகளோடு மட்டும் வைத்துக் கொள்ளக்கூடாது. அது காது , மூக்கு, தொண்டை என்று ஒரு முக்கோணத்தை உண்டாக்கி மூளையைக் கூட சில சமயங்களில் முடக்கி விடுவதுண்டு. சளி பிடித்தால் காதடைக்கிறது. மூக்கு "ரிலீஸானால்" காது ரிலாக்ஸ் ஆகிறது. இப்படி "E.N.T." பிரச்சினை என்று சொல்லப்படுகிற நோய்களுக்கு கதவடைப்பு நடத்த நாம் முதலில் என்ன செய்யவேண்டும்? முதலில் அந்த நோய்கள் பற்றி தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பின்னர் மருத்துவரை அணுக வேண்டும்.

" அப்படி காதில் என்னதான் பிரச்சினைகள் வந்துவிடப் போகின்றது?" என்று நீங்கள் கேட்பது புரிகிறது. சாதாரணமாக குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சளி உண்டாகும் போதோ அல்லது மற்ற வேளைகளிலோ காதில் சீழ் வருகிறது என்பார்கள். காதை வெளிக்காது, நடுக்காது, உள் காது என்று மூன்றாகப் பிரிக்கலாம். இதில் ஏதேனும் ஒன்றில் கிருமித் தொற்று ஏற்படும் போது காதில் இருந்து வெள்ளையாய் சீழ் வருகிறது. அது துர்நாற்றம் கொண்டதாகவும் இருக்கும். இதனை காதில் தொற்று என்பார்கள்.

**காதுத் தொற்று**

இதனை குறுகிய காலத் தொற்று, நெடு நாளையத் தொற்று என்று சொல்வார்கள். ASOM ( ACUTE SUPPORATIVE OTITIS MEDIA), CSOM (CHRONIC SUPPORATIVE OTITIS MEDIA) என்பார்கள். காதில் சீழ் வடிந்து துர்நாற்றம் அடிக்கும் போது சில சமயங்களில் காது நரம்புகள் பாதிக்கப்பட்டு செவித்திறனும் பாதிக்கப்படலாம். காது மந்தமாகலாம். அல்லது முழு செவிடும் ஆகலாம்.




காதால் சிலருக்கு மயக்கம் வருகிறது. "தண்ணி" அடித்தது போல் தலை சுற்றுகிறது என்பார்கள். இது உண்மைதான். இதனைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். தலை சுற்றல் , மயக்கம் ஆகியவை காதுக்கு பெரிய ஆபத்தை ஏற்படுத்தும். சில சமயங்களில் இதனை "ஹார்ட் அட்டாக்" இற்கு சமமானது என்று கூட சொல்வார்கள்.

**மயக்கம்**

சுமார் 150 வருடங்களுக்கு முன்பு மூளையில் தான் மயக்கம் ஏற்படுகிறது என்று மருத்துவ உலகம் நம்பிக் கொண்டிருந்தது. இந்நிலையில் மயக்க நோயாளி ஒருவர் இறந்த போது அவரது உடலை மருத்துவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தினார்கள். அப்போது அந்த நோயாளிக்கு உட்காதில் நோய் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அதிலிருந்து காது சம்பந்தப்பட்ட பிரச்சினைகளாலும் தலைசுற்றல் மயக் கம் வரும் என்ப தைத் தெரிந்து கொண்டார்கள். இந்த உண்மை யைக் கண்டு பிடித் தவர் " மீனியர்" என்ற பிரெஞ்சு டாக்டர்.

எனவேதான் காது கேளாமை, காது இரைச்சல், மயக்கம் ஆகிய இந்த மூன்றும் சேர்ந்த நோய் " மீனியர்ஸ் நோய்" என்று அழிக்கப்படுகிறது.

இ மூளையாலோ, நரம்பினாலோ ஏற்படுவ தில்லை.

பொதுவாக உடலில் மயக்கம் ஏற்படுவதற்கான எல்லாக் காரணங்களையும் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். உதாரணமாக இரத்த அழுத்தம், இரத்தத்தில் பால்வினை நோய் பிடிப்பு நோய் , மனநோய் ஆகியவை இருக்கிறதா என்று ஆராயவேண்டும்.

தலைச்சுற்றல், மயக்கம் ஏற்படும் நோயாளிகளில் 5 சதவிகிதம் பேருக்கு நோய்க்கான முக்கிய காரணத்தைக் கண்டுபிடிக்கவே முடியாத சூழ்நிலையும் உள்ளது. இத்தகையவர்களுக்கு பலவகையான உடற் பயிற்சிகளே சிகிச்சையாகிறது. கண்களை மேலும் கீழுமாகப் பார்க்க வைத்தல் , தலையை முன்னும்,பின்னுமாக அசைப்பது, தோள் பயிற்சி , குனிந்து நிமிர்தல் , உடலோடு சேர்த்து தலையை வலது, இடது பக்கமாகத் திருப்புதல் போன்றவை நல்ல பலன் தரும். யோகாவும் உதவும்.

இதனால் கண், காது மற்றும் உடல் உறுப்புகள் அனைத்தும் சீர்செய்யப்படுகின்றன. எந்தச் செயலால் தலை சுற்றல் , மயக்கம் ஏற்படுகிறதோ அதைத் திரும்பத் திரும்ப செய்யும் போது பழக்கமாகி விடும். அதேபோல் இந்த நோயை எதிர்த்து நிற்க மற்ற உறுப்புகளும் தயாராகி விடுகின்றன.

**டாக்டர் ப.உ.லெனின்**

**மீனியர்ஸ் நோயின் அறிகுறிகள்**

இந்த நோய் விட்டுவிட்டு வரும். ஓய்வில் இருக்கும் போதும் , தூங்கும் போதும் கூட வரும். நோயாளிக்கு தானே தலை சுற்றுவது போலவும் தோன்றும். இவ்வாறு தலை சுற்றும் போது காது கேளாமையும் , காது இரைச்சலும் ஏற்படும். அதோடு சிலருக்குக் கடுமையான குமட்டலும் , வாந்தியும் ஏற்படும். அப்போது படுக்கையிலே இருக்க வேண்டும் என்கிற உணர்வும் உண்டாகும். பயப்படுத்தி எடுக்கும். இதற்கு நிம்மதி தருவது படுக்கைதான்.




# செல்போன் காதுகேட்கும் திறனைப் பாதிக்குமா?

செல்போன் பயன்படுத்துவதால் எத்தகைய பாதிப்புகள் ஏற்படும் என்று அறுதியிட்டுக் கூறமுடியது. காரணம் அதுகுறித்து ஆய்வுகள் எதுவும் இன்னும் முழுமையடையவில்லை. ஆனால், நடந்து கொண்டிருக்கும் ஆய்வுகளை வைத்து, செல்போனால் சில பிரச்சினைகள் வர வாய்ப்பு இருப்பதாக கணித்திருக்கிறார்கள்.

காது ஒரு நுட்பமான உறுப்பு. சாதாரணமாக 70 முதல் 75 டெசிபல் வரையுள்ள சத்தங்களைத்தான் நம் காதுகள் கேட்க வேண்டும். அதிக பட்சமாக 90 டெசிபல் வரை உள்ள சத்தங்களைக் கேட்கலாம். ஒருநாளுக்கு அதிக பட்சம் நான்கு மணி நேரம் அப்படிக்கேட்டால் பரவாயில்லை. அதுவும் விட்டு விட்டுத்தான் கேட்க வேண்டும். தொடர்ச்சியாக கேட்கக் கூடாது. அப்படி கேட்பதால் காதின் கேட்கும் திறனில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

ஆனால், செல்போன் உபயோகிக்கும் போது என்ன நிகழ்கிறது தெரியுமா? சாதாரணமாகவே செல்போன் வழியாக 90 முதல் 100 டெசிபல் வரையுள்ள சத்தத்தைக் கேட்கவேண்டியுள்ளது. நம் காதுகளால் கேட்கக்கூடிய அதிகபட்ச ஒலி அளவை விட இது அதிகம். அதனால் காதுகளின் கேட்கும் திறன் நாளடைவில் குறை யவும் வாய்ப்பு இருக்கிறது. செல்போனில் 15 முதல் 20 நிமிடங்கள் வரை பேசினால் அவ்வளவாக பாதிப்பு இருக்காது. ஆனால், தொடர்ச்சியாக அரை மணி நேரம், ஒரு மணி நேரம் என்று பேசுவதால் கண்டிப்பாக பாதிப்பு ஏற்படும்.

தவிர, செல்போனில் இருந்து வெப்பமும் வெப்ப கதிர்வீச்சும் வெளிப்படுகிறது. நாம் செல்போனை காதுக்கு மிக அருகில் வைத்துப் பேசுவதால், இந்த வெப்பமும் கதிர் வீச்சும் நம் காதுக்கு உள்ளே இருக்கும் மிக நுண் ணிய நரம்புகளை பாதிக்க வாய்ப்புள்ளது. அதேபோல செல்போனில் விட்டு விட்டு சிக் னல் கிடைப்பதால், கதிர்வீச்சின் அளவில் ஏற்ற இறக்கம் ஏற்படும்.

**டாக்டர் ரவிராமலிங்கம்**
காது, மூக்கு, தொண்டை மருத்துவ நிபுணர்
சென்னை

இந்த மாற்றத்தாலும் காது நரம்புகள் பாதிப்பு அடையலாம். நாளடைவில் கலண்டர் அசைவது, பேனா கீழே விழுவது போன்ற சிறிய சத்தங்களைக் கூட கேட்க முடியாமல் போய்விடலாம்.

செல்போனை நேரடியாக காதுக்கு அருகில்வைத்துப் பேசாமல் ஹாண்ட்ஸ் ஃப்ரீ உபயோகித்துப் பேசுதவன் மூலம் பாதிப்பை ஓரளவு தவிர்க்கலாம்.

# தூக்கமின்மை ஏன்? விரட்டுவது எப்படி?



நல்ல சாப்பாடு, நண்பர்களுடன் அரட்டை , குழந்தைகளுடன் விளையாட்டு, இப்படி ஒரு திட்டமிட்ட வாழ்க்கை இருந்தும் இரவில் தூக்கம் வரவில்லை என்றால் என்ன ஆகும்? நினைத்துப்பாருங்கள். வாழ்க்கை நரகம் தான்.

உடலில் நோய்கள் இருந்து தூக்கம் இல்லை என்றால் சமாளித்து விடலாம். நோய்களுக்காக மாத்திரைகள் எடுத்துக் கொள்ளும் போது தூக்கம் வராது . இது ஒரு அசாதாரண சூழ்நிலை. மாத்திரைகள் எடுத்துக்கொள்வதை நிறுத்தி விட்டால், தூக்கம் நன்றாக வரும்.

இப்படி எந்தக்காரணமும் இல்லாமல் , தூக்கம் வரவில்லை என்றால், அதற்கான காரணத்தை கண்டுபிடிப்பது அவசியம். தூக்கம் வராததற்கு பத்துக்காரணங்கள் உண்டு என்று வேடிக்கையாகச் சொல்வார்கள். அவற்றில் எந்த அளவு உண்மை இருக்கிறது.

♆ தினமும் எட்டு மணி நேரம் தூக்கம் அவசியம்: ஒரு மனிதனுக்கு தினமும் விற்பனை கலோரிச்சத்து உணவு தேவைப்படும் என்பதற்கு ஒப்பான கருத்து இது. இதற்குச் சரியாகப் பதில் சொல்வது கடினம். அதுபோல் தான் தூக்கமும். தூக்கம் ஒருவருக்கு ஒருவர் மாறுபடும். ஒரு நாளில் எட்டு அல்லது குறைந்த பட்சம் 6 மணி நேரத்தூக்கம் அவசியம். இந்த நேரம் குறைந்தால், இதய நோய் அல்லது புற்றுநோய் வர வாய்ப்பிருப்பதாக சொல்கிறது அமெரிக்க ஆராய்ச்சி .நீண்ட நேரம் தூங்குபவர்களுக்கு இந்த ரிஸ்க் அதிகம் .

தூக்கத்தால் அவதிப்படுபவர்கள் ஒரு வாரம் வரை தூங்கும் நேரத்தை டயரியில் குறிப்பெடுத்து வைத்துக்கொள்ளலாம். அதன்படி எழுந்திருக்கும் –தூங்கும் நேரத்துக் கும் இடையில் இருக்கும் இடைவெளியை நோட் பண்ணுவது அவசியம். தூக்க ஊக்கிகள் பயன்படுத்தாமல் தூக்கம் வருகிறதா என்பதை உறுதி செய்து கொள்வதும் அவசியம்.

♆ பிற்பகல் விழாவில் போர் அடிக்கும் பேச்சை கேட்டவுடன் தூக்கம். இது இயல்பாக வருவது தான். ஆனால் ஒரு சிலருக்கு தூக்கம் வராது. இமைகள் மூடியிருப்பது போல் தோன்றும். ஆனால் தூக்கம் கண்களை தழுவாது. தினமும் ஒரு 7 மணி நேரம் மட்டுமே தூங்கும் பழக்கம் இருந்தாலும், மீதி இருக்கும் ஒரு மணி நேரத்தை உடல் ஈடு செய்ய விரும்பும். சிலர் அதனை ஈடு செய்யும் விதமாக பகலில் குட்டித்தூக்கம் போடுவார்கள். இருப்பினும் நாட்பட்ட தூக்கமின்மையால் உயர் இரத்த அழுத்தம் ஏற்பட வாய்ப்புண்டு. வயதானவர்களாக இருந்தால் , நீரிழிவு உண்டாகும் வாய்ப்பும் அதிகம்.

♆ தூக்கமின்மை இருந்தால் சீக்கிரம் படுக்கச் செல்லவேண்டும். பொதுவாக தூக்கமின்மைக்கு நிறையக்காரணங்கள். தூக்கம் வரவில்லையே என்பதற்காக படுக்கை அறைக்கு செல்லவே சிலர் விரும்பு வதில்லை. நமக்குத்தான் தூக்கம் வருவதில் லையே இது தவறு. மாறாக தூக்கமின்மைக் கான காரணம் என்ன என்பதை கண்டறிந்து, அதை நிவர்த்தி செய்ய வேண்டும்.

மது ,கோப்பி,மன அழுத்தம், மனச் சோர்வு உள்ளிட்டவையும் தூக்கமின்மைக்கு பொது வான காரணங்கள் என்ன செய்ய லாம்? வழக்கத்தை விட ஒரு மணி நேரம் *லேட்டாக* படுக்கச் செல்லலாம். தூக்கம் வருவதற்குரிய சில எளிய பயிற்சிகள் மேற்கொள்ளலாம். உதாரணமாக எண்களை மனதிற்குள் சொல்வது, எளிதான மூச்சுப்பயிற்சியில் ஈடுபடுவது ... சுவாரஸ்யம் இல்லாத புத்தகங்கள் படிப்பது... தொடர்ந்து தூக்கமின்மை இருந்தால், டாக்டர் ஆலோசனைப்படி மாத்திரைகள் எடுத்துக்கொள்ளலாம்.

(அடுத்த வாரம் வரும்)

# ஹசிம் அம்லா அசத்தல் சதம்; தென்னாபிரிக்காவுக்கு அடுத்த வெற்றி

(டொமினிகா)

அம்லாவின் அதிரடி சதத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் நான்காவது ஒருநாள் போட்டியிலும் வெற்றிபெற்றது.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 2 இருபது-20, 5 சர்வதேச ஒருநாள் போட்டிகள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது-20 தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றிய தென்னாபிரிக்க அணி தொடர்ந்து நடைபெற்ற முதல் மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்று 3-0 என்ற கணக்கில் தொடரை தனதாக்கியது.

இந் நிலையில் நான்காவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் டொமினிகாவில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 303 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சந்தர்போல் 66 ஓட்டங்களையும் ரிச்சட்ஸ் 59 ஓட்டங்களையும் டி.ஜே.பிரவோ 46, டி.எம்.பிரவோ 45 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் லாங்க்வெல்ட், ரிசோற்சோபே ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் மோர்கல், மைக்லரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அம்லாவின் அதிரடி சதத்தின் மூலம் 50 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 304 ஓட்டங்களைக் குவித்து 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் ஹசிம் அம்லா 115 பந்துகளில் (9 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 129 ஓட்டங்களையும் ஏ.பி.டி.வில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களையும் ஜக் கலிஸ் 51 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் டி.ஜே.பிரவோ, அணித்தலைவர் கிறிஸ் ஹயில், பொல்லார்ட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 4-0 என்ற கணக்கில் முன்னிலையியுள்ளது.



## இந்திய அணிக்கு சகாரா அனுசரணை

இந்தியக் கிரிக்கெட் அணியின் அனுசரணையாளராக மீண்டும் சகாரா நிறுவனம் தெரிவாகியுள்ளது. இந் நிறுவனம் இந்திய கிரிக்கெட் அணி விளையாடும் ஒவ்வொரு போட்டிக்கும் 3.3 கோடிரூபாயை அனுசரணைப் பணமாக வழங்க ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்தியக்கிரிக்கெட் அணியின் அனுசரணையாளரான ஒப்பந்தம் முடிபடைந்ததும் அதைத்தொடர்ந்து இந்தியக்கிரிக்கெட் சபை புதிய அனுசரணையாளருக்கான கேள்வி அறிவித்தலை கோரியிருந்தது.

இந்நிலையில் சகாரா குழுமம், ஏர்டெல் ஆகிய 2 நிறுவனங்கள் அனுசரணையாளர் உரிமையைப்பெற விண்ணப்பித்திருந்தன.

அனுசரணையாளர் உரிமையாருக்கு என்பது பற்றி கிரிக்கெட்சபையின் சந்தைப்படுத்தல் குழு நேற்று அறிவித்தது.

இதன் மூலம் 2013ஆம் ஆண்டு டிசம்பர் வரை சகாரா நிறுவனத்தின் ஒப்பந்தம் இருக்கும். சகாரா நிறுவனம் ஒரு ஆட்டத்துக்கான தொகையை 3.3 கோடிரூபாயாக குறிப்பிட்டிருந்தது. ஏர்டெல் நிறுவனம் இதைவிட குறைந்த தொகையை குறிப்பிட்டதால் அனுசரணை உரிமையை இழந்தது.

# முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது



(லண்டன்)

பின்னின் சிறப்பான பந்துவீச்சின் மூலம் முதலாவது டெஸ்டில் இங்கிலாந்து அணி 8 விக்கெட்டுக்கள் மூலம் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 27ஆம் திகதி லண்டன் லோட்டஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணித்தலைவர் சகித் அப்துல் ஹசன் முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி திரோட்டின் இரட்டைச் சதத்தின் மூலம் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 505 ஓட்டங்களை எடுத்தது.

இதில் திரோட் 226 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஸ்ரொரஸ் 83 ஓட்டங்களையும் மோர்கன் 44 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகாடாட் ஹுசையின் 5 விக்கெட்டுக்களையும் சகிப் அல்ஹசன் 2 விக்கெட்டுக்களையும் ரபேல் ஹுசைன், மகமடுல்லா ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும்வீழ்த்தினர்.

தொடர்ந்து தனதுமுதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 282 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து பொலோன் நிலைக்கு தள்ளப்பட்டது.

இதில் யுனைட்டச்சிற்றிக் 58 ஓட்டங்களையும் தமீம் இக்பால் 55 ஓட்டங்களையும் இம்ரூள் ஹேய்ஸ் 43 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அன்ரர்சன் பின் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இந்நிலையில் பொலோன் முறையில் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 382 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் தமிம் இக்பால் 100 பந்துகளில் (15 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 103 ஓட்டங்களையும் இம் ரூல் ஹேய்ஸ் 75 யுனைட்டட் சிற்றிக் 74, யாசுகுல் ஸ்லாம் 46 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பின் 5 விக்கெட்டுக்களையும் பிரேஷ்மன் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதன் மூலம் 160 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்றைய 5ஆம் நாள் ஆட்ட தேநீர் இடைவேளைக்கு சற்றுமுன் 2 விக்கெட்டுக்களையுமிழந்து 163 ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் அணித்தலைவர் அன்ரூ ஸ்ரெரஸ் 88 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 82 ஓட்டங்களையும் திரோட் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சகிப் அல் ஹசன், மகமடுல்லா ஆகியோர் தலா ஒருவிக்கெட்டை வீழ்த்தினர். இவ் வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இப் போட்டியில் 9 (முதல் இன்னிங்ஸில் 4, இரண்டாவது இன்னிங்ஸில் 5) விக்கெட்டுக்களை கைப்பற்றிய இங்கிலாந்து அணியின் பின் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# பிரேசில் மீண்டும் சம்பியன்



ஏழாவது உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடர் சிலியில் 1962ஆம் ஆண்டு மே 30 ஆம் திகதி முதல் யூன் 17ஆம் திகதி வரை நடைபெற்றது. ஆறாவது உலகக் கிண்ணத் தொடரைப் போன்று இம் முறையும் 16 அணிகள் தொடரில் பங்கேற்றன.

இதில் முதல் சுற்று முடிபில் சோவியத் யூனியன், சிலி, பிரேஸில், இங்கிலாந்து, மேற்கு ஜேர்மனி, யூகோஸ்லாவியா, ஹங்கேரி மற்றும் செக்கோசெலாவாக்கியா ஆகிய அணிகள் காலிறுதிச்சுற்றுக்கு முன்னேறின.

இச்சுற்றில் சிலி, பிரேஸில், யுகோஸ்லாவியா, ஆகிய நான்கு அணிகளும் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறின.

இதில் பிரேஸில் அணி 4-2 என்ற கோல் கணக்கில் சிலி அணியையும் செக்கோ செலாவாக் கியா 3-1 என்ற கணக்கில் யூகோஸ்லா




வியா அணியையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

**பிரேஸில் மீண்டும் சம்பியன்**

விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் பிரேஸில் அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது.

முன்னணி வீரர்களான ஸ்சேரர், சீற்றோ, வாவா ஆகியோரின் துடிப்பான ஆட்டம் கைகொடுக்க பிரேஸில் அணி 3-1 என்ற கணக்கில் செக்கோசெலாவாக்கியா அணியை வீழ்த்தி அடுத்தடுத்து,

இரண்டாவது (1958,1962) முறையாக உலகக்கிண்ணத்தை சுவீகரித்தது. தொடரை நடத்திய சிலி மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

இத் தொடரில் கால் பந்தாட்ட ஜாம்பவான் பீலே உபாதை காரணமாக விலகியிருந்த போதும் பிறேஸில் அணி சாதித்தமை குறிப்பிடத்தக்கது.

## பார்முலா I கார் பந்தயம் ஹமில்டன் வெற்றி

பார் முலா கார்பந்தயம் உலக முழுவதும் 19 சுற்றுக்களாக நடந்துவருகிறது இதன் 7 ஆவது பந்தயமான துருக்கி கிராண்ட்பிரிக்ஸ் இஸ்தான்புல் நகரில் நேற்றுமுன்தினம் நடந்தது. 24 வீரர்கள் களம் கொண்ட இந்தப் போட்டியில் இங்கிலாந்து லிவிஸ் ஹமில்டன் (மெக்லரன் அணி) 1 மணி 28 நிமிடம் 47.620 வினாடிகளில் இலக்கைக்கடந்து வெற்றி பெற்றார். இதே அணியைச்சேர்ந்த மற்றொரு வீரர் ஜென்சன் பட்டன் (இங்கிலாந்து) 2ஆவது இடம்பிடித்தார்.





கிளிநொச்சி கணேசபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட சடலங்களையும் அதனைக் கிளிநொச்சி நீதவான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரிகள் குழு பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# சர்வதேச விசாரணையை நிராகரிக்கும் போக்கையே அரசு கொண்டுள்ளது

## லூயிஸ் ஆர்பர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல் தொடர்பில் சர்வதேச விசாரணையை நிராகரிக்கும் போக்கையே இலங்கை அரசு கொண்டிருப்பதாக லூயிஸ் ஆர்பர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த வருடம் இடம்பெற்ற போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச நெருக்கடிகள் குழுவின் தலைவர் லூயிஸ் ஆர்பர் வெளியிட்டுள்ள வீடியோ ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக கடந்த வாரம் நாம் வெளியிட்ட அறிக்கையில் படைத் தரப்பினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடந்த வருடம் இடம்பெற்ற இறுதிப் போரில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பான மிக முக்கியமான குற்றச்சாட்டுக்களை தகுந்த ஆவணங்களுடன் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

2009 ஆம் ஆண்டு முதல் 5 மாதங்களும் இடம்பெற்ற இப் போரில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மற்றும் வன்முறைகள் பொதுமக்களுடைய அடிப்படை உரிமைகளுக்கு எதிரானவை என்பதைக் குறிப்பிட்டிருக்கின்றோம்.

படைத் தரப்பினர் மனிதாபிமான உதவி நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் பொதுமக்கள் மீது திட்டமிட்ட வகையிலேயே தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதை அங்கிருந்து கிடைக்கும் ஆதாரங்களின் மூலம் உறுதிப்படுத்தக் கூடியதாகவுள்ளது.

இந்த ஆதாரங்களின் பிரகாரம் இப் போரின் போது படைத்தரப்பால் பெருமளவு பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவது குறித்து தெரிந்திருந்தும் அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கோ, பொதுமக்களைப் பாதுகாப்பதற்கோ அரச தரப்பு முயற்சிக்கவில்லை என்பதை நம்பக் கூடியதாக இருக்கின்றது.

இது சர்வதேச போர் நியமங்களுக்கு எதிரான நடவடிக்கை என்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரானவை என்றுமே சர்வதேச நெருக்கடிகள் குழு கருதுகின்றது.

இந்த அடிப்படைகளிலேயே இலங்கையில் இடம்பெற்றுள்ள போர்க் குற்றங்கள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சர்வதேச நெருக்கடிகள் குழு வலியுறுத்துகின்றது.

சர்வதேச நெருக்கடிகள் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டதிலிருந்து வெளிப்படையான பொறுப்புணர்வுடன் கூடிய ஒரு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு பல்வேறு அமைப்புக்களும் ஊடகங்களும் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

தகுந்த ஆதாரங்களுடன் வெளியிடப்பட்ட எமது இந்த அறிக்கை தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்புடன் கூடிய பதில் எதனையும் இதுவரை அளிக்கவில்லை.

இந் நிலையில் இலங்கையில் நீண்ட காலமாக நிலவி வந்த போக்கிலிருந்து இலங்கை அரசு விடுபட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தவும் தமிழ் மக்கள் உண்மையில் விடுதலைப்புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றோம் என்பதை அம் மக்கள் நம்பும் வகையில் உறுதிப்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகும். (ச-5)

# பாடசாலைக்கு புதிய கட்டடம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புதிய கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுக்க சம்மதம் தெரிவித்துள்ளார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட ஓர் அரச பாடசாலை என்ற வகையில் புதிய கட்டடத் தொகுதி அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாடசாலையின் ஏனைய தேவைகள் கட்டம் கட்டமாக நிறைவேற்றி வைக்கப்படும் எனப் பாடசாலைச் சமூகத்தினருக்கு உறுதியளித்தார்.

இதனைய விட மேலும் பல பௌதிக வளங்களை வழங்க அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளதாக கூறப்பட்டது.

மேற்படி பாடசாலையின் வகுப்பறைகள் கட்டடங்கள் என்பவற்றை நேரடியாகப் பார்வையிட்ட அமைச்சர் பாடசாலையின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். (ச-5)

## மனிதப் புதைகுழி அச்சமே...

மாவட்டத்திலிருந்து மனிதப் புதைகுழிகள் மீட்கப்பட்டன. இதையடுத்து எம் மக்கள் மத்தியில் பாரிய சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அரசு நிலத்தில் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகளை அகற்றிய பின்பே மீள் குடியேற்றங்களைச் செய்யலாம் என்று கூறிக் கொள்வதில் உண்மையிராது என்றும் இறுதி நாள்களில் யுத்தம் இடம்பெற்ற நிலப்பரப்புக்களிலிருந்து மனிதப் புதைகுழிகள் மீட்கப்படலாம் என்பதாலேயே மீள்குடியேற்றங்களை அரசு தாமதப்படுத்துகின்றது என்றும் ஐயம் கொண்டுள்ளார்கள்.

யுத்தம் முடிபடைந்து ஓராண்டு கழிந்துவிட்டது. காணாமல் போனவர்கள் குறித்து எந்தத் தகவல்களும் இல்லை. இந்நிலையில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றமை மக்கள் மனதில் பெரும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

புதைத்தல், மதுபானம் ஒழித்தல் போன்ற விடயங்களில் மாத்திரம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றமை போதாது. அரசியலிலும் மக்கள் விழிப்படைய வேண்டும்.

மக்கள் அவர்களின் வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்துகின்றமை குறித்து அறிந்திருத்தல் வேண்டும் என்றார். (ச-5)

## சர்வதேச...

பெற்ற மோதல்கள் தொடர்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரிக்க வேண்டியுள்ளது. (ச-5)

## கணேச...

தொடர்பாக விசாரணை கள் நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கும் மருத்துவ பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கும் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பி.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

சட்ட வைத்தியத் துறையில் நிபுணத்துவம் பெற்ற ஒருவரின் ஆலோசனையையும் பெற்றுக் கொண்டு மருத்துவ பரிசோதனை செய்யுமாறு நீதிவான் சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களுக்கு அருகில் தேடுதல் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3,5)

# மனித உரிமை மீறல்கள் குறித்து...

ஜெனீவாவில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 14-வது அமர்வில் நேற்று உரையாற்றிய நவநீதம்பிள்ளை, உலகளவில் மனித உரிமைகள் நிலைவரங்கள் குறித்த அறிக்கை ஒன்றையும் அங்கு சமர்ப்பித்தார்.

உலக மட்டத்தில் பல நாடுகளில் காணப்படும் அடக்கு முறைகள் அநீதிகள், புறக்கணிப்புக்கள் மற்றும் வன் செயல்கள் குறித்து இந்த அறிக்கையில் அவர் கோடி காட்டியிருக்கின்றார்.

குறிப்பாக உலக மட்டத்தில் பெண்கள் பக்கச் சார்பாக நடத்தப்படுதல், வறுமை போன்ற நிலைமைகளில் அவதியுறல் போன்ற விடயங்கள் குறித்தும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை நிலைவரங்களைப் பொறுத்தவரை சர்வதேச மட்டத்திலான சில நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டியுள்ள நவநீதம்பிள்ளை, அதில் முதலாவதாக இலங்கை நிலைவரம் குறித்துத் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இறுதிக் கட்டப் போரின் போது அங்கு நிகழ்ந்ததாகக் கூறப்படும் நிகழ்வுகள் பற்றி மனித உரிமை கவுன்சிலில் விவாதிக்கப்பட்ட போதும் அந்தக் கூட்டத்தில் இலங்கை அரசாங்கம் தான் உறுதி வழங்கிய கடப்பாடுகள் பிரதிபலிக்கும் வகையில் செயற்பட ஐ.நா. வலியுறுத்த வேண்டும்.

உள் நாட்டில் இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியமர்தலில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அவசர உதவிகளின் மூலம் பாதியளவு ஆசுவாசம் கிடைத்தது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும் பரிகாரம் கிடைக்கவும் அத்துடன் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் நீதி முன் நிறுத்தப்படவும் நீண்ட கால அடிப்படையிலான நல்லிணக்கத்திற்கும் உறுதியான நடவடிக்கைகள் தேவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

போர்க் காலத்தில் நிகழ்ந்த சில விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு குறித்து குறிப்பிட்ட நவநீதம்பிள்ளை,

இருந்த போதிலும் முன்னைய அனுபவங்கள் மற்றும் புதிய தகவல்கள் ஆகியவற்றைக் கொண்டு பார்க்கின்றபோது இந்த விடயம் குறித்து விசாரிக்க ஒரு சர்வதேச சுயாதீன ஏற்பாடே சிறப்பானது என்றும்,

அத்தகைய சர்வதேச ஏற்பாட்டுக்கே இலங்கையும் மற்றும் ஏனைய நாடுகளிலும் மக்களின் நம்பிக்கை கிடைக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாய்லாந்து நிலைமைகள் குறித்துக் கூறியுள்ள அவர், அங்கு ஒழுங்கை நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்குள்ளது என்று கூறியுள்ளது.

இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் கடந்த வாரத்தில் பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட வகைதொகையற்ற தாக்குதல்களை அவர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இது போன்று ஆபிரிக்கா உட்பட்ட உலகின் பல்வேறு நாடுகளில் காணப்படும் மனித உரிமை நிலைவரங்கள் குறித்து அந்த அறிக்கையில் அவர் தனது கரிசினையை வெளிப்படுத்தியுள்ளார். (ச-3,5)

## நீதிமன்ற...

நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத் தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா மீதான இந்த வழக்கை சட்ட மா அதிபர் திணைக்களம் தாக்கல் செய்திருந்தது. (ச-5)

## போரில்...

கடந்த பின்னரே மரணச் சான்றிதழை வழங்க முடியும்.

எனினும் புதிய சட்டமூலம் அமுல்படுத்தப்பட்டால் ஒரு வருடத்திற்குள் காணாமல் போனோரின் உறவினர்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## மகசீன்...

களைச் விடுதலை செய்ததுபோல் எமது விடயம் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றையும் சிறைக்கைதிகள், நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியிடம் கையளித்தனர். (ச-7)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.